## சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை

## சுற்றுலா

## கொள்கை விளக்கக் குறிப்பு 2010–2011

### முன்னுரை

சுற்றுலா மனிதர்களின் பொழுதாக்க அம்சமாகவும், அறிவை விரிவுபடுத்தவும் சிந்தனையைச் செம்மையாக்கவும் முக்கிய பங்கு வகிக்கிறது. “சுற்றுலாப் பயணி என்பவர் பொழுதுபோக்கு, வியாபாரம் மற்றும் பிற காரணங்களுக்காக, தனது இருப்பிடத்தை விட்டு ஒரு நாளுக்கு மேல், ஆனால் ஓராண்டிற்கு குறைவாக பிற இடங்களில் தங்குபவர்” என்று உலகச் சுற்றுலா நிறுவனம் வரையறுத்துள்ளது.

சுற்றுலா செல்வது உலக அளவில் புகழ் பெற்ற பொழுதுபோக்கு. மக்களின் வேகமான வாழ்க்கையும், போட்டிகள் நிறைந்த சூழலும் அவ்வப்போது சுற்றுலா சென்று வருவதை கட்டாயமாக்குகிறது. அதன் மூலம் ஓய்வாக இருக்கவும், புத்துணர்ச்சி பெறவும் தங்களை புதுப்பித்துக் கொள்ளவும் அவர்களால் முடிகிறது. மனித நேயத்தை மேம்படுத்துவதில் சுற்றுலா ஆழ்ந்த பங்கு வகிக்கிறது. இதன் விளைவாக வெவ்வேறு நாகரிகங்களுக்கு இடையே பண்பாட்டுப் பரிமாற்றத்திற்கு வழி ஏற்படுகிறது. அறியப்படாத இடங்களை கண்டறியும் ஆர்வத்தோடு



நமது முன்னோர்கள் மேற்கொண்ட பயணங்களின் விளைவாக புதிய சிந்தனைகள் பரவின. தொழில் நுட்பம், புதிய உணவு வகைகள் பற்றிய அறிவு வளர்ச்சி பெற்றது. இன்றும், அடுத்த இடத்திலிருந்து சிறந்த பழக்கங்களை உறிஞ்சிக் கொண்டு மனித வாழ்க்கையை மேம்படுத்த பயணங்கள் அவசியமானவையாக பரிமளிக்கின்றன.

சங்கப்புலவர் கணியன் பூங்குன்றனார் ‘யாதும் ஊரே; யாவரும் கேளிர்’ என்று உலகச் சமத்துவத்திற்குக் குரல் கொடுத்தவர். ஷேக்ஸ்பியர் “வீட்டில் மந்தமாய் வாழ்ந்து என் இளமையை சோம்பலில் கழிப்பதைக் காட்டிலும் நான் இவ்வுலகத்தின் அதிசயங்களை வெளி நாடுகளில் காண உன் துணையைக் கோருவேன்” என்று எடுத்துரைத்தார்.

### இந்தியாவில் சுற்றுலா

இந்தியாவில் சுற்றுலா என்பது மிக நீண்ட காலமாக வெறும் சேவைத் துறையாகவே கருதப்பட்டது. தற்போது சுற்றுலா அதன் பலதிறப்பட்ட பயன்களால் ஏற்றுமதி தொழிலாக ஏற்கப்பட்டுள்ளது. காலம் கடந்து முக்கியத்துவம் பெற்றாலும், சுற்றுலா மிக வேகமாக வளர்ச்சி அடைந்து, பன்னாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையும் அதனால் அன்னியச் செலாவணியும் பெரிதும் அதிகரித்துள்ளது. தற்போது இந்தியாவின் பெரிய பணித் துறைகளில் ஒன்றாக சுற்றுலா விளங்குவதுடன், தேசிய நிகர உள்நாட்டு உற்பத்தி வீதம் 6.23 விழுக்காடாகவும், மொத்த வேலை வாய்ப்பில் 8.78 விழுக்காடாகவும் உயர்ந்து முக்கிய பங்காற்றியுள்ளது. உலக பயண மற்றும் சுற்றுலா குழும அறிக்கை, 2009 முதல் 2018 முடிய பத்து வருட வளர்ச்சி வளங்களின் மூலம், விரும்பத்தக்க சுற்றுலா நாடாக இந்தியா இருக்கும் என்று தெரிவிக்கிறது. 2007ம் ஆண்டின் பயண மற்றும் சுற்றுலா போட்டித்தன்மை அறிக்கையில், இந்திய சுற்றுலா விலைத் தன்மை (cost factor) அடிப்படையில் 6வது இடத்தில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாட்டில் சுற்றுலா**

நீண்ட காலத்திற்கு முன்பே சுற்றுலாவின் முக்கியத்துவத்தை உணர்ந்த தமிழ்நாடு, சுற்றுலாவின் வளர்ச்சியை முன்னேற்றத்திற்கான திசையில் செலுத்தி வருகிறது. கடந்த நான்காண்டுகளில், தீவிரமான சந்தைப் படுத்துதல், சுற்றுலா அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு, பிற துறைகளிடமிருந்து நிதி பெறுதல், சுற்றுலா ஆர்வலர்களை ஊக்கப்படுத்துதல், சுற்றுலா நேய பண்பாட்டை வளர்த்தல், மருத்துவச் சுற்றுலா, சாகசச் சுற்றுலா போன்ற புதிய வழிமுறைகளைக் கண்டறிதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டதன் மூலம் தமிழ்நாடு சுற்றுலா 20 விழுக்காட்டிற்கும் மேலான ஆண்டு வருமான வளர்ச்சியை எட்டியுள்ளது.

**சுற்றுலா – ஒரு பார்வை**

தொழில் நுட்ப தேர்ச்சி பெற்ற மற்றும் தேர்ச்சி பெறாதவர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கும் தனித்தன்மையை கொண்டது சுற்றுலாத் தொழிலாகும். சுற்றுலாத் தொழில் அந்தந்த பகுதி மக்களின் மேம்பாட்டினையும் உறுதி செய்கிறது. மேம்படுத்தப்பட வேண்டிய வளங்கள் இந்தியாவில் ஏராளமாக உள்ளன.

நூறு கோடிக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட நம் நாட்டில், பன்னாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை மிகவும் சொற்பமாக 50 இலட்சத்தை மட்டுமே தாண்டியுள்ளது. பன்னாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் இந்தியாவின் பங்கு 0.6 விழுக்காடாகும். பன்னாட்டு சுற்றுலா வருமானத்தில் இந்தியாவின் பங்கு 1.24 விழுக்காடாகும். சுற்றுலா சார்ந்த இனங்களின் வளர்ச்சி, சுற்றுலாப் பயணிகள் தங்கும் நாட்களை நீட்டித்தல் மற்றும் சுற்றுலா காலத்தை சிறந்த முறையில் செலவிடும் வழிகள் போன்றவை இங்கு சுற்றுலாப் பயணிகள் செலவிடுவதை அதிகப்படுத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. உலக அளவிலான உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையுடன்



ஒப்பிடும்போது, இந்திய உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை 4.6 விழுக்காடாக உள்ளது. 2009ம் ஆண்டில் சுற்றுலாவின் மூலமாக ரூ.54,960 கோடி அன்னியச் செலாவணியாக ஈட்டப்பட்டுள்ளது. 0.6 விழுக்காடு என்ற ஒரு மிதமான வளர்ச்சி, பன்னாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் 50 இலட்சமாகவும், அன்னியச் செலாவணி ஈட்டலில் ரூ.54,960 கோடியாகவும் மற்றும் வேலை வாய்ப்பினை உருவாக்குவதில் ஆறு விழுக்காடு வளர்ச்சியாகவும் மாறும். மாசற்ற சுற்றுப்புற சூழல் மூலம் இதனை அடையலாம். எனவே, சுற்றுலாவை முதன்மையாகக் கருதி, சுற்றுலா பெரிய அளவில் வளர்ச்சியடைய தேவையான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது முக்கியமாகும்.

**தமிழ்நாடு – சுற்றுலா வளங்கள்**

தமிழ்நாட்டில், பலதரப்பட்டக் கண்கவரும் சுற்றுலா மகிழ்விடங்கள் உள்ளன. அவை வழிபாட்டிடங்கள், ஆன்மீகத் தலங்கள், கடற்கரைகள், மலைவாழ் இடங்கள், அருவிகள், வனவிலங்குகள், கலை, பண்பாடு, கட்டிடக் கலை, கைவினைப் பொருட்கள், தொன்மைத் தலங்கள், வரலாற்றுச் சின்னங்கள் ஆகியவை. தமிழ்நாட்டின் சமுதாய, பண்பாட்டு ஒழுக்க நெறிகளையும், வழக்கங்களையும் சிறிதும் விட்டுக் கொடுக்காமல் சிறந்த சுற்றுலா வளர்ச்சிக்கு தமிழ்நாடு வித்திடுகிறது. இதனால், தரமான சுற்றுலாத் தொழில் உருவாகியுள்ளது. கலையும் அழகுணர்வும் கொண்ட சுற்றுலாப் பயணிகள், நம் மாநிலத்தின் பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பெரிதும் பாராட்டுகின்றனர். உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளையும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளையும் கவருவதில், தமிழ்நாடு தற்போது மூன்றாவது இடம் வகிக்கிறது. இந்தியாவில், தமிழ்நாட்டைச் சுற்றுலாப் பயணிகள் விரும்பும் முதல் மாநிலமாக உருவாக்க முனைப்பான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**2009–2010 ஆம் ஆண்டிற்கான உத்திகள்**

கடந்த சில ஆண்டுகளில், பன்னாட்டு சுற்றுலாத் தொழிலில் பெரும் பின்னடைவு ஏற்பட்டு, சுற்றுலாப் பயணிகளின்

வருகை பெரிதும் குறைந்தது. பொருளாதாரப் பின்னடைவால், ஈட்டும் வருமானம் குறைந்து, உபரித்தொகை குறைவாகும் சூழல் உருவானது. பெருத்த முதலீட்டுடன் உருவாக்கப்பட்ட பல வசதிகள், பயன்பாட்டை இழந்து விட்டன. தமிழ்நாட்டைப் பொருத்தவரை, தடையற்ற சீரான சுற்றுலா வளர்ச்சிக்கு மக்களின் செலவிடும் தகுதிக்கேற்ற சுற்றுலா கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கான தொலைநோக்கு அணுகு முறையும், புதிய சுற்றுலாச் சந்தைகளை கண்டறிந்து அவற்றுக்கு முக்கியத்துவம் அளித்தல் ஆகியவையும் பெரும் பங்காற்றியுள்ளன. அவ்வகையிலான புதிய நடவடிக்கைகள் பின்வருமாறு :–

1) சுற்றுலா ஆர்வலர்கள் மற்றும் சுற்றுலா வசதிகள் செய்து தருவோரிடையே சுற்றுலா நேயப் பண்பாட்டை வளர்க்கும் விதமாக, ‘‘விருந்தினர் போற்றுதும்! விருந்தினர் போற்றுதும்!!’ என்ற முகாம்கள், சுற்றுலாப் பயணிகள் மகிழ்ச்சியுடன் தங்குவதை உறுதி செய்கின்றன. இந்த ‘விருந்தினர் போற்றுதும்!’ முகாம்கள் வாய்வழிப் பிரச்சாரம் மூலம் சுற்றுலாப் பண்பாட்டை செரிவாக்கியுள்ளன. எனவே, சுற்றுலாப் பயணிகள் மீண்டும் மீண்டும் தமிழகம் வரத் தொடங்கி இருக்கிறார்கள்.

2) “தரமான சுற்றுலா’’–‘‘பண வசதிக்கேற்ற சுற்றுலா’’ என்பதற்கு முக்கியத்துவம் அளித்து உள்நாட்டிலும், வெளி நாட்டிலும் சுற்றுலாத் தொழிலை தீவிரமாக விளம்பரம் செய்தல்.

3) சுற்றுலாப் பயணங்களுக்காக அதிக அளவில் செலவிடும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் மீது கவனம் கொள்ளுதல்.

4) மருத்துவச் சுற்றுலா, கல்விச் சுற்றுலா, சாகசச் சுற்றுலா, கிராமச் சுற்றுலா மற்றும் வணிகச் சுற்றுலா போன்றவைகளை மேம்படுத்துவதன் மூலம் மாற்றுத் தேவையினை உருவாக்குதல்.

5) வளமான சுற்றுலாத் தலங்களில் சுற்றுலா வணிகம் தொடர்பான கூட்டங்களை நடத்துதல்.



6) புதிய சுற்றுலா மேம்பாட்டு வழிமுறைகளை கண்டறிந்து உருவாக்குவதற்காக உணவக நிர்வாகிகள், சுற்றுலா வாகன உரிமையாளர்கள், விமானப் போக்குவரத்து பிரதிநிதிகள், இரயில்வே நிர்வாகிகள் மற்றும் பிற சுற்றுலா ஆர்வலர்களுடன் அடிக்கடி கூட்டங்கள் நடத்துதல்.

7) பிரபலமடைந்த ஒரு சில சுற்றுலாத் தலங்களுக்கு மக்கள் அதிகம் சென்று நெருக்கடி ஏற்படுவதை குறைக்கும் பொருட்டு, அதிகம் அறியப் பெறாத தலங்களைக் கண்டறிந்து மேம்படுத்துதல்.

உலக அளவில் சுற்றுலாப் பயணிகள் வருகையில் பின்னடைவு ஏற்பட்டபோதும், மேற்கூறிய புதிய நடவடிக்கைகளினால், சமாளிக்க முடிந்தது மட்டுமின்றி 2009–ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் தமிழ்நாடு 24.4 விழுக்காடு வளர்ச்சியையும் பதிவு செய்துள்ளது.

**இந்தியாவிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள்**

இந்தியாவிற்கு வரும் பன்னாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 2005–ல் 0.49 விழுக்காடாக இருந்து, 2009–ல் 0.6 விழுக்காடாக உயர்ந்து முன்னேற்றம் கண்டுள்ளது. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 2005–ல் 39.2 இலட்சத்தில் இருந்து 2009–ல் 51.1 இலட்சமாக அதிகரித்துள்ளது. இந்தியாவின் அந்நியச் செலாவணி வருமானத்திற்கு சுற்றுலாவின் பங்கு குறிப்பிடத் தக்கதாகும். இவ்வருமானம் 2005–ல் ரூ.33,123 கோடியாக இருந்து, 2009–ல் ரூ.54,960 கோடியாக அதிகரித்துள்ளது. சுற்றுலாவிலிருந்து கிடைக்கின்ற உலக வருமானத்தில் இந்தியாவின் பங்கு 2005–ல் 1.10 விழுக்காடாக இருந்து, 2008–ல் 1.24 விழுக்காடாக அதிகரித்துள்ளது. இக்கால கட்டத்தில் உள்நாட்டு சுற்றுலா வருமானமும் வியத்தகு அளவில் அதிகரித்துள்ளது. இந்தியாவில் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 2005–ல் 3,919.50 இலட்சத்திலிருந்து, 2008–ல் 5,627.50 இலட்சமாக அதிகரித்துள்ளது.

*மத்திய அரசின் சுற்றுலா அமைச்சக ஆண்டு புள்ளி விவரக் கையேடு.

**தமிழ்நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை**

தேசிய அளவிலும் பன்னாட்டு அளவிலும் பத்திரிக்கைகள் மற்றும் மின்னணு ஊடக வழி பிரச்சாரங்கள், தீவிர சுற்றுலா மேம்பாட்டு மற்றும் வர்த்தக முகாம்கள், பிரச்சாரங்கள் வாயிலாகவும், சுற்றுலாத் தலங்களில் சிறந்த கட்டமைப்பு வசதிகளுக்கு வகை செய்தல் ஆகியவற்றின் பயனாகவும் தமிழ்நாட்டுக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை பின்வருமாறு தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

(லட்சத்தில்)

| ஆண்டு | உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் | வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் | மொத்தம் | வளர்ச்சி வீதம் (விழுக்காட்டில்) |
|---|---|---|---|---|
| 2005 | 323.39 | 11.79 | 335.18 | 7.7 |
| 2006 | 392.14 | 13.35 | 405.49 | 21.0 |
| 2007 | 506.47 | 17.53 | 524.00 | 29.2 |
| 2008 | 626.18 | 20.40 | 646.58 | 23.4 |
| 2009 | 780.38 | 23.69 | 804.07 | 24.4 |

2008–ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 646.58 இலட்சம் ஆகும். 2009–ஆம் ஆண்டில் இது 804.07 இலட்சமாக அதிகரித்தது. மேற்கூறிய இரண்டு ஆண்டுகளில் வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை ஒப்பிட்டுப் பார்க்கையில், 2009–ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை உயர்வு 157.49 இலட்சம் என பதிவு செய்யப்பட்டுள்ளது.

உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டில் தங்கும் கால அளவு ஐந்து நாட்களாகும். வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைப் பொறுத்தவரை, அவர்கள் தமிழ்நாட்டில் தங்கும் கால அளவு ஏழு நாட்களாகும்.



**அதிகம் பிரபலமாகாத சுற்றுலாத் தலங்களை மேம்படுத்த மேற்கொண்ட தங்கு தடையற்ற முயற்சிகள்**

தமிழ்நாட்டில் ஏற்கனவே உள்ள பிரபலமான சுற்றுலா மையங்களுக்கு மக்கள் பெருமளவில் செல்வதால் ஏற்படும் நெருக்கடியைக் குறைத்திட, அதிகம் பிரபலமாகாத பதினெட்டு சுற்றுலாத் தலங்களை தேர்ந்தெடுத்து, அவற்றை முனைப்புடன் மேம்படுத்த அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இம் முயற்சிகளின் மூலம் பிரபலமான சுற்றுலாத் தலங்களில் மக்கள் நெருக்கடி குறைவதுடன், புதிதாகக் கண்டறியப்பட்ட சுற்றுலாத் தலங்களில் வேலை வாய்ப்பும் அதிகரிக்கும். 19–3–2010 அன்று சமர்பிக்கப்பட்ட நிதி நிலை அறிக்கையில், அதிகம் பிரபலமாகாத சுற்றுலாத் தலங்களின் பட்டியலில் மேலும் பதினான்கு இடங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இது இந்த முயற்சிக்கு வேகத்தை அளிப்பதுடன், இவ்விடங்களில் அதிக முதலீட்டையும் ஈர்க்கும். மேலும் இவ்விடங்களில் சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுக்கவும், விரும்பத்தக்க வகையில் வசதிகள் செய்திடவும், இவ்விடங்களில் சுற்றுலாப் பணிகள் தொடர்பான முதலீட்டாளர்களுக்கு பல்வேறு ஊக்கத் தொகைகளையும் அரசு அறிவித்துள்ளது. இந்த அதிகப் பிரபலமாகாத சுற்றுலாத் தலங்களை மேம்படுத்த, பல்வேறு ஆதாரங்களின் மூலம் நிதி பெறுதலுக்கு கவனமான முடிவுகளை தமிழக அரசு மேற்கொண்டதன் பயனாக பெறப்பட்ட நிதிகள் விபரம் பின்வருமாறு :–

**அதிகம் பிரபலமாகாத சுற்றுலாத் தலங்களை மேம்படுத்த ஒப்பளிக்கப்பட்ட நிதிகள் விபரம்**

| வ. எண் | இடத்தின் பெயர் | மாவட்டம் | ஒப்பளிக்கப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| | | | மைய அரசு நிதி | மாநில அரசு நிதி | கூடுதல் |
| 1 | பழவேற்காடு | திருவள்ளூர் | 260.00 | 70.84 | 330.84 |
| 2 | ஏலகிரி | வேலூர் | 365.72 | 934.28 | 1300.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | திருக்கடையூர் | நாகப்பட்டிணம் | 112.00 | –– | 580.98 |
| 4 | வேதாரண்யம் | | 75.90 | –– | |
| 5 | தரங்கம்பாடி | | 373.08 | –– | |
| 6 | திருமணஞ்சேரி | | – – | 20.00 | |
| 7 | சித்தன்னவாசல் | புதுக்கோட்டை | 23.00 | –– | 23.00 |
| 8 | புளியஞ்சோலை | திருச்சிராப்பள்ளி | 97.02 | –– | 97.02 |
| 9 | தாரமங்கலம் | சேலம் | –– | 80.15 | 80.15 |
| 10 | கொல்லி மலை | நாமக்கல் | 327.98 | 107.00 | 434.98 |
| 11 | ஒகேனக்கல் | தருமபுரி | 336.18 | 151.14 | 487.32 |
| 12 | பவானிகூடுதுறை | ஈரோடு | –– | 39.00 | 39.00 |
| 13 | வால்பாறை | கோயம்புத்தூர் | –– | 171.14 | 171.14 |
| 14 | சிறுமலை | திண்டுக்கல் | –– | 5.00 | 5.00 |
| 15 | திருப்புடைமருதூர் | திருநெல்வேலி | 49.55 | –– | 49.55 |
| 16 | திற்பரப்பு | கன்னியாகுமரி | –– | 105.00 | 105.00 |
| | | கூடுதல் | 2020.43 | 1683.55 | 3703.98 |

**மனித வள மேம்பாடு**

சுற்றுலா, விருந்தோம்பல் பண்பை அடிப்படையாகக் கொண்ட தொழிலாக இருப்பதால், இதில் வரவேற்பு, சுற்றுலா பயணிகள் தங்குமிட வசதிகள் பராமரிப்பு, உள் அலங்காரம், உணவு ஆகியவற்றில் தொழில்முறை உத்திகளை புகுத்த வேண்டியது அவசியமாகிறது. தமிழ்நாட்டில் இரண்டு அரசு உணவக மேலாண்மை நிறுவனங்கள் உள்ளன.

**மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பவியல் நிறுவனம், துவாக்குடி, திருச்சிராப்பள்ளி**
(அகில இந்திய தொழில்நுட்ப கல்விக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டு தமிழ்நாடு அரசின் தொழிற் கல்வி இயக்ககத்துடன் இணைக்கப்பட்டது)

இந்நிறுவனம் உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பவியலில் மூன்றாண்டு பட்டயப் படிப்பும், உணவு தயாரித்தல், உணவு மற்றும் பானங்கள் விநியோகம், சுற்றுலாப் பயணிகள் தங்குமிட வசதி பராமரிப்பு, ரொட்டி மற்றும் தின்பண்டம் தயாரித்தல் ஆகியவற்றில் ஓராண்டு சான்றிதழ் படிப்பும் வழங்குகிறது. 26 ஏக்கர் பரப்பில் பரந்து விரிந்துள்ள இந்நிறுவனத்தில் 600 மாணவர்கள் படித்து வருகின்றனர்.



இந்நிறுவனம் "ஹுனார் சே ரோஜ்கர் யோஜனா" திட்டத்தைச் செம்மையாக செயல்படுத்தியதற்காக தேசிய விருது பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**உணவக மேலாண்மை, உணவாக்கத் தொழில்நுட்பவியல் மற்றும் ஊட்டச்சத்து பயிற்சி நிறுவனம், தரமணி, சென்னை**

இந்தியாவின் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான இந்நிறுவனத்தில், உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில் நுட்பவியலில் மூன்றாண்டு பட்டயப் படிப்பும், பல்வேறு கைவினைச் சான்றிதழ் படிப்புகளும் பயிற்றுவிக்கப்படுகிறது. விருந்தோம்பல், உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில் நுட்பவியலில் உயர்தர கல்வியை 1963ம் ஆண்டு முதல் வழங்கி வருகிறது. விருந்தோம்பல் மேலாண்மையில் தொடர்ந்து சிறந்த ஒரு நிறுவனமாகவும் விளங்கி வருகிறது.

**ஹுனார் சே ரோஜ்கர் யோஜனா**

இந்திய அரசு சுற்றுலா அமைச்சகத்தால் நடத்தப்படும் திறன்சார் பயிற்சி வழங்கும் திட்டத்தின் கீழ், சென்னை தரமணியில் உள்ள உணவக மேலாண்மை, உணவாக்கத் தொழில்நுட்பவியல் மற்றும் ஊட்டச்சத்து பயிற்சி நிறுவனம் "ஹுனார் சே ரோஜ்கர் யோஜனா" என்ற ஒரு பயிற்சியை நடத்துகிறது. இதில் 18 முதல் 25 வயதுள்ள, 8ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு விருந்தோம்பல் பயிற்சித் திட்டத்தில் உணவு தயாரிப்பில் எட்டு வாரங்கள் பயிற்சியும், உணவு (ம) பானங்கள் விநியோகத்தில் ஆறு வாரங்கள் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இப் பயிற்சிக் காலத்தில் உதவித் தொகையாக முறையே ரூ.2,000 மற்றும் ரூ.1,500 வழங்கப்படுவதுடன், இலவச சீருடை, ஒரு முக்கிய உணவு மற்றும் தேநீரும் பயிற்சி பெறுபவர்களுக்கு அளிக்கப்படுகிறது.

மேற்காண் பயிற்சியை வெற்றிகரமாக முடித்தவர்களுக்கு, தொழில்துறை வல்லுநர்கள் மூலம் செயல்முறை தேர்வுகளால், பயிற்சியாளர்களின் திறன் அளவிடப்படுகிறது. வெற்றி பெற்ற பயிற்சியாளர்களுக்கு விருந்தோம்பல் துறையில் வேலை வாய்ப்பு கிடைத்திட ஏற்பாடு செய்யப்படுகிறது. **2009–2010** ஆம் ஆண்டில் ஐந்து அணிகளில் **252** நபர்கள் வெற்றிகரமாக பயிற்சி பெற்றுள்ளனர்.

## சென்னையிலுள்ள இந்திய உணவக மேலாண்மை நிறுவனத்திற்கு தேசிய விருதுகள்

மாண்புமிகு இந்திய அரசு சுற்றுலாத் துறை இணை அமைச்சர் திரு. சுல்தான் அகமது அவர்கள் தலைமையில் நடைபெற்ற வண்ணமிகு விழாவில் பின்வரும் தேசிய விருதுகளை சென்னையிலுள்ள இந்திய உணவக மேலாண்மை நிறுவனம் பெற்றுள்ளது.

1. தேசிய அளவில் சிறந்த நிறுவனம்
2. சிறந்த கல்வியாண்டு நிர்வாகத் திறன்
3. இரண்டாவது சிறந்த நிர்வகிக்கும் நிறுவனம்
4. இந்திய அரசு திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் சிறந்த நிறுவனம்
5. ஹுனார் சே ரோஜ்கர் யோஜனா திட்டத்தை நிறைவேற்றுவதில் சிறப்பு விருது

## திறன் வளர்ப்பு பயிற்சி

சுற்றுலாவை திறம்பட மேம்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு சுற்றுலாத் துறை மூலம் திறன் வளர்ப்பு பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இதன்படி பின்வரும் வகையினருக்கு தொடர்ந்து பயிற்சி அளிக்கப்படும்.



- ஊரக சுற்றுலா இடங்களிலுள்ள உள்ளூர் மக்கள்
- தனியார் உணவகங்களில் பணிபுரியும் வரவேற்பு பணியாளர்கள்
- வாடகை சீருந்துகள் மற்றும் ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள்
- விமான நிலையங்கள், இரயில்வே நிலையங்கள் மற்றும் பேருந்து முனையங்களில் சுற்றுலா பயணிகளைக் கையாளும் பணியாளர்கள்.

## தொழில் – நிறுவன தொடர்புகள்

இளைஞர்கள் சுற்றுலா கல்வியை எடுத்துப் பயிலுவதை ஊக்குவிக்கத் தமிழ்நாடு சுற்றுலா, அவர்களின் கல்வி தொடர்பான தகவல்களையும், பிற விவரங்களையும் அளிக்கிறது. சுற்றுலா தொழில் சார்ந்த பயிற்சியும் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. சுற்றுலா அதிகாரிகள் கல்வி நிறுவனங்களுக்குச் சென்று சுற்றுலா சார்ந்த கல்வி பயிலும் மாணவர்களுக்கு ஆலோசனைகள் அளிக்கின்றனர்.

## தொழில் ரீதியான அமைப்புகள் மற்றும் தொழிற் சங்கங்களுடன் ஒத்துழைப்பு

சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக இந்திய மக்கள் தொடர்பு சங்கம் (சென்னை அத்தியாயம்) போன்ற தொழில் ரீதியான அமைப்புகள், தென்னிந்திய விடுதி மற்றும் உணவகங்களின் சங்கம் (SIHRA), இந்திய பயண ஏற்பாட்டாளர்கள் சங்கம் (IATO), இந்திய பயண முகவர்கள் சங்கம் (TAAI) போன்ற சுற்றுலா தொழில் சங்கங்களுடன் தமிழ்நாடு சுற்றுலாத் துறை ஒருங்கிணைந்து செயல்படுகிறது.

## புதிய சுற்றுலாத் திட்டங்கள்

### சுற்றுச் சூழல் சுற்றுலா

சில சுற்றுலாப் பயணிகள் இயற்கைச் சூழலில் ஆர்வம் மிக்கவர்களாக இருப்பார்கள். தமிழ்நாட்டில் மலை வாழிடங்கள், அருவிகள், வனங்கள், பறவைகள் சரணாலயங்கள், கடற்கரைகள் என பலவகையான இயற்கைச் செல்வங்கள் ஏராளமாக உள்ளன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் 19–10–2009 அன்று ‘‘சுற்றுச் சூழல் சுற்றுலா’’ என்ற தனிப் பிரிவு ஒன்று, இந்திய வனப் பணியில் மூத்த அதிகாரி ஒருவரின் தலைமையின் கீழ் நிறுவப்பட்டுள்ளது. முன்னேற்றம் மற்றும் வருவாய் ஈட்டும் நோக்கத்துடன், சுற்றுலாத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உதவி செய்தல், திறன் வளர்ப்பு மற்றும் அரசு தனியார் கூட்டுத் தொழிலை ஊக்குவித்தல் ஆகியவை குறித்து கவனம் செலுத்துவதன் மூலம் தொடர்ந்து சுற்றுலா முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து தமிழ்நாட்டை உலக அளவில் சிறந்த சுற்றுலா இடமாக ஆக்குவதே தமிழ்நாடு சுற்றுலாவின் தொலைநோக்குப் பார்வையாகும்.

### ஊரகச் சுற்றுலா

கடினமான வாழ்க்கைச் சூழலில் வாழும் நகரவாசிகளுக்கு ஊரகப் பகுதிகளுக்குச் சென்று அவற்றின் வியத்தகு அமைதிச் சூழலை அறிமுகப்படுத்துவது புதிய ஒரு நிகழ்வு ஆகும். நகரத்தில் பிறந்து வளரும் பெரும்பான்மையான குழந்தைகளுக்கு, கிராம வாழ்க்கை பற்றி அறியும் வாய்ப்பு இல்லை. இது அவர்களின் ஆளுமையை முழுமை பெற்றதாக ஆக்குவதில்லை. எனவே, வேளாண்மை மற்றும் அது சார்ந்த செயல்பாடுகளின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ளும் வகையில் நகரவாசிகளின் மனத்தை மாற்றி, கிராமப் பகுதிகளை சுற்றுலாமயப்படுத்த, தமிழ்நாடு சுற்றுலாத்துறை முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இது அவர்களுக்கு ஒரு வித்தியாசமான அனுபவத்தை அளிப்பதோடன்றி, அவர்கள் பிற்காலத்தில் மிகவும் கருணையுள்ளம் உடையவராக இருப்பதற்கும் உதவுகிறது.



ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டத்துடன் இந்திய அரசு சுற்றுலா அமைச்சகம் இணைந்து, திறன் வளர்ப்புக்கு முன்னோடித் திட்டமாக கிராமச் சுற்றுலாவை எடுத்துக் கொண்டுள்ளது. இந்திய அரசு சுற்றுலா அமைச்சகம், வரையறுக்கப்பட்ட அளவுக்குள் கட்டமைப்பு வசதிகளுக்கு நிதியுதவி அளிக்கிறது. திறன் வளர்ப்புக்கான நிதியை இந்திய அரசின் சுற்றுலா அமைச்சகம் மூலமாக ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டம் அளிக்கிறது. திறன் வளர்ப்பு பயிற்சி போன்ற மென்பொருள் சார்ந்த இனங்களை, மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் உள்ளூர் மக்களின் ஒத்துழைப்புடன் ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டம் தேர்ந்தெடுத்த அரசு சாரா அமைப்பு செயற்படுத்துகிறது. ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டத்துடன் இணைந்து செயல்பட்ட பகுதிகள் தவிர ஏனைய கிராமப் பகுதிகளுக்கும் சேவை வழங்குவோருக்கான திறன் வளர்ப்பு பயிற்சித் திட்டத்தை இந்திய அரசு நீட்டித்துள்ளது.

மேம்படுத்த வேண்டிய ஊரகச் சுற்றுலாப் பகுதிகளை தமிழ்நாடு சுற்றுலாத்துறை கண்டறிந்து, அவை படிப்படியாக மேம்படுத்தப்பட்டு வருகின்றன. உள்நாட்டு சுற்றுலாவை மேம்படுத்த, ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலுள்ள பல சுற்றுலா இடங்கள் கண்டறியப்பட்டு, அவற்றுக்கு அதிக அளவில் நிதி வழங்கப்படுகிறது.

**கடந்த நான்கு ஆண்டுகளில் ஊரகப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றுலா மேம்பாட்டுப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு விபரம்**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | ஒப்பளிக்கப் பட்ட தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள கழுகுமலை மேம்பாடு – கட்டமைப்பு வசதிகள் மற்றும் பயிற்சித் திட்டம் | 68.68 |
| 2. | சிவகங்கை மாவட்டத்திலுள்ள செட்டிநாடு மேம்பாடு – கட்டமைப்பு வசதிகள் மற்றும் பயிற்சித் திட்டம் | 70.00 |
| 3. | தருமபுரி மாவட்டத்திலுள்ள தீர்த்தமலை மேம்பாடு | 50.00 |

| | | |
|---|---|---|
| 4. | இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள தேவிப்பட்டினம் மேம்பாடு | 75.60 |
| 5. | திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள திருக்குறுங்குடி மேம்பாடு | 50.00 |
| 6. | திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள திருப்புடைமருதூர் மேம்பாடு | 49.50 |
| 7. | தேனி மாவட்டத்திலுள்ள குரங்கணி மேம்பாடு | 50.00 |
| 8. | திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள தடியன்குடிசை மேம்பாடு | 50.00 |
| 9. | விழுப்புரம் மாவட்டத்திலுள்ள இடையன் சாவடி மேம்பாடு | 20.00 |
| 10. | காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள வடநெம்மேலி மேம்பாடு – கட்டமைப்பு வசதிகள் மற்றும் பயிற்சித் திட்டம் | 67.95 |
| 11 | விழுப்புரம் மாவட்டத்திலுள்ள திருவக்கரையில் உள்கட்டமைப்பு வசதிகள் செய்தல் | 47.15 |
| 12 | விழுப்புரம் மாவட்டத்திலுள்ள மேல்மலையனுார் கிராமம் மற்றும் ஆலயப் பகுதியில் உள்கட்டமைப்பு வசதிகள் செய்தல் | 63.37 |
| 13 | சிவகங்கை மாவட்டத்திலுள்ள குன்றக்குடியில் உள்கட்டமைப்பு வசதிகள் செய்தல் | 43.25 |
| 14 | பெரம்பலுார் மாவட்டத்தில் சாத்தனுாரில் உள்ள கல்மரம் பகுதியில் உள்கட்டமைப்பு வசதிகள் செய்தல் | 50.10 |
| 15 | நாமக்கல் மாவட்டத்திலுள்ள கொல்லிமலை மேம்பாடு | 100.00 |
| 16 | சிவகங்கை மாவட்டத்திலுள்ள மடப்புரம் ஆலயப் பகுதியில் உள்கட்டமைப்பு வசதிகள் செய்தல் | 126.00 |
| 17 | தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள மனோரா மேம்பாடு | 31.95 |
| 18 | நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள திருக்கடையூரில் ஒருங்கிணைந்த சுற்றுலா வசதிகள் செய்தல் | 75.00 |
| 19 | கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள வனபத்ரகாளியம்மன் ஆலயப் பகுதியில் உள்கட்டமைப்பு வசதிகள் செய்தல் | 68.98 |
| 20 | கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள தளி பெரிய ஏரி மேம்பாடு | 60.00 |
| 21 | நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள திருக்கண்ணபுரம் மேம்பாடு | 7.20 |
| 22 | திருவாரூர் மாவட்டத்திலுள்ள கண்கொடுத்த வனிதத்தில் உள்கட்டமைப்பு வசதிகள் செய்தல் | 62.30 |



| | | |
|---|---|---|
| 23 | ஈரோடு மாவட்டத்திலுள்ள கொடிவேரி அணை பகுதியில் மூன்றடுக்கு கண்காணிப்பு கோபுரம் கட்டுதல் | 16.35 |
| 24 | திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள உவரி கிராமத்தை மேம்பாடு செய்தல் | 100.00 |
| 25 | கன்னியாகுமரி மாவட்டத்தில் களியால் கிராமத்திலுள்ள சித்தார் அணை மேம்பாடு | 20.00 |
| | **மொத்தம்** | **1423.38** |

## சாகசச் சுற்றுலா

தமிழ்நாட்டில் எண்ணிலடங்காத ஆலயங்கள் நிறைந்துள்ளதால், பாரம்பரியமாக புனித வழிபாட்டு அனுபவங்களுக்கான சிறந்த இடமாக கண்டறியப்பட்டுள்ளன. மேலும், தமிழகத்திலுள்ள பல பசுமையான இடங்கள் வெளியோர்களால் அதிகம் அறியப்படாத இடங்களாகும். இதனால் நடுத்தர வயது மக்களே நாடி வருகின்றனர். இம்மன நிலையை மாற்ற, சாகசச் சுற்றுலாவிற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இளைஞர்களுக்கு தன்னிகரில்லாத சாகச அனுபவங்களை அளிக்கும் வகையிலான 20 அருவிகள், 12 மலை வாழிடங்கள், நிறைய நீர் நிலைகள், 12 படகு இல்லங்கள், நீண்ட கடற்கரையோரப் பகுதிகள் மற்றும் வனவிலங்கு சரணாலயங்கள் ஆகியன அமைந்துள்ளன. காட்டுவழி நடைப் பயணம், மலையேற்றம், கூடாரம் அமைத்து தங்குதல், நீர் விளையாட்டுகள், படகு சவாரி மற்றும் பறவைகளை நோக்குதல் போன்றவற்றை தமிழ்நாட்டில் வெற்றிகரமாக மேற்கொள்ள இயலும் என்பதால், தமிழக சுற்றுலாத் தலங்கள் இளைஞர்களை அதிக அளவில் ஈர்ப்பதுடன், அவர்களை மீண்டும் மீண்டும் இம்மாநிலத்திற்கு வருகை புரியத் துாண்டுகிறது. ஆகையால், அனைத்து வழிகளிலும் நிதி ஆதாரங்களைப் பெறத் தேவையான வழிவகைகளை ஏற்படுத்தி, மிகப் பெரிய அளவில் இந்த புதிய வகை சாகசச் சுற்றுலாக்களை மேம்படுத்திட தமிழக சுற்றுலாத்துறை முனைப்பாக உள்ளது.

முட்டுக்காடு மற்றும் முதலியார்குப்பம் படகு குழாம்களில் சாகசப் படகுகள், நீர் ஸ்கூட்டர்கள், ஒரே துடுப்பு படகுகள், வாழைப்பழ வடிவிலான படகுகள் போன்றவை பயன்பாட்டில் உள்ளன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக படகு இல்லங்களில் சர்ஃபிங், ஸ்கீயிங் போன்ற நீர் சாகச விளையாட்டுகளை அறிமுகப்படுத்த தேவையான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சாகச சுற்றுலா விளையாட்டு நடவடிக்கைகள் தவிர, தமிழக சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறையினருடன் இணைந்து, அதிகம் அறியப்படாத குறைவான உயரமுடைய மலைகளில் காட்டுவழி நடைபயணம் மேற்கொள்ளும் வகையில் சாகச சுற்றுலாக்கள் நடத்தப்பட்டு வருகிறது. ஏலகிரி மலையில் நடத்தப்பட்டு வரும் 'பாரா–கிளைடிங்' எனப்படும் மலை விளிம்பிலிருந்து பறந்து செல்லும் சாகச விளையாட்டு அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை கவர்ந்துள்ளது.

சமீபத்தில் நடைபெற்ற குடியரசு தின அணி வகுப்பில் சாகச சுற்றுலாதான் தமிழ்நாடு சுற்றுலாவின் கருப்பொருளாக இருந்து, அனைவரையும் கவர்ந்தது.

**மருத்துவச் சுற்றுலா**

தமிழ்நாடு, இந்தியாவிலுள்ள மருத்துவச் சேவை வழங்கும் இடங்களில் முதன்மையாக விளங்குகிறது. அதிக அளவிலான பல்நோக்கு மருத்துவமனைகள், சிறப்பு வாய்ந்த அரசு மருத்துவமனைகள், குறைந்த செலவில் தரமான சிகிச்சைகள் மற்றும் அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் தேவைப்படும் மருத்துவ வசதிகள் ஆகியன நமது மாநிலத்தை உலகப் புகழ் பெற்றதாக ஆக்கியுள்ளன. மூன்று முக்கிய இனங்கள், தமிழ்நாட்டை அனைவரும் விரும்பும் ஒரு மருத்துவச் சுற்றுலா மையமாக்கியுள்ளன. அவை, நோயாளிகள் காத்திருக்கத் தேவையில்லை, மேற்கத்திய நாடுகளுடன் ஒப்பிடும்போது மிகக் குறைவான மருத்துவக் கட்டணங்கள், மருத்துவமனைகளில் நோயாளிகள் அவர்களது வசதிக்கேற்ப உடல் நலத்தை மீளப்



பெறுதல் ஆகியனவாகும். தனிச்சிறப்பு வாய்ந்த மருத்துவர்கள், பொறுப்புணர்வுள்ள மருத்துவம் சாராத பணியாளர்கள் ஆகியோரின் அர்ப்பணிப்பு முயற்சிகள் இதனை சாத்தியம் ஆக்கியுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள முன்னணி மருத்துவமனைகளின் மருத்துவ வல்லுனர்கள் மற்றும் தலைமை செயல் அலுவலர்களுக்கு மருத்துவச் சுற்றுலா குறித்த தூண்டுதலை ஏற்படுத்தவும், இதன் முக்கியத்துவம் குறித்தும், உள்ளூர் மக்களுக்கு சிறப்பான மருத்துவ வசதிகள் அளிக்கப்பட வேண்டிய அவசியம் குறித்து உணரச் செய்திடவும், காலமுறை இடைவெளியில் கருத்தரங்குகள், பயிலரங்கங்கள் போன்றவைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

**பூங்காவில் பூங்காற்று**

சென்னை மாநகரில் மிக அழகிய பூங்காக்கள் உள்ளன. இந்தப் பூங்காக்களை சென்னை மாநகராட்சி சீரமைத்து அழகிய புல்வெளிகள் மற்றும் கண்கவர் நீரூற்றுகளை அமைத்து பூங்காக்களை பசுமை நிறைந்தவைகளாக மாற்றியுள்ளது. உள்ளூர் மக்களுக்கு பொழுதுபோக்காக அமையவும், நாட்டுப்புறக் கலைகளை பேணிக்காக்கவும், "பூங்காவில் பூங்காற்று" என்ற தலைப்பில் இப்பூங்காக்களில் சுழற்சி முறையில் ஒவ்வொரு சனிக்கிழமை மாலையிலும் கலை நிகழ்ச்சி நடத்திட முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சி கலாச்சார சுற்றுலாவை மேம்படுத்துவதுடன், திறமையுள்ள இளங்கலைஞர்களை ஊக்குவிப்பதாகவும் இருக்கும்.

**படைப்புலகச் சுற்றுலா**

சுற்றுலாவின் ஆரம்ப நாட்களில் இருந்தே பண்பாட்டுச் சுற்றுலாவின் ஒரு வடிவமாக படைப்புலகச் சுற்றுலா இருந்துள்ளது. ஆண்டுதோறும் நடைபெறும் வர்த்தகப் பொருட்காட்சியில், அரசு கவின் கலைக் கல்லூரி மாணவர்களை பங்கேற்கச் செய்து, பொருட்காட்சிக்கு வரும் பார்வையாளர்களின் உருவங்களை உடனடியாக வரைந்து தருவதன் மூலம், அம்மாணவர்கள்

பயிலும்போதே வருவாய் ஈட்டுமாறு செய்து, தமிழ்நாடு சுற்றுலா படைப்புலகச் சுற்றுலாவிற்கு வழிவகை ஏற்படுத்தியுள்ளது. மேலும், 2009ம் ஆண்டில் நடத்தப்பட்ட ''சித்திரச் சந்தை''–யில் புகழ்பெற்ற ஓவியர்கள் வரைந்த ஓவியங்கள் கண்காட்சிக்கும், விற்பனைக்கும் வைக்கப்பட்டது.

**கல்விச் சுற்றுலா**

வகுப்பறை சூழலுக்கு வெளியே, கற்பித்தல் மற்றும் கற்கும் அறிவு, தொழில்நுட்ப திறனை மேம்படுத்துதல் ஆகியவற்றின் வளர்ச்சி, கல்விச் சுற்றுலாவை மேம்படுத்துவதற்கான ஒரு காரணமாகும். இந்த முயற்சியை முனைப்பாக மேம்படுத்த, பல்வேறு கல்வி நிறுவனங்களோடு தமிழ்நாடு சுற்றுலா கைகோர்த்து, எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகம், ஸ்டெல்லா மேரிஸ் மகளிர் கல்லூரி, எத்திராஜ் மகளிர் கல்லூரி, காயிதே மில்லத் கல்லூரி, புனித வளனார் பள்ளி, புனித பாட்ரிக் பள்ளி போன்ற கல்வி நிறுவனங்களுக்கு கல்விச் சுற்றுலாக்களை ஏற்பாடு செய்துள்ளது.

**இருண்மைச் சுற்றுலா**

சுற்றுலாவில், சிறந்த ஆர்வத்துடன் வளர்ந்து வரும் ஒரு பகுதியாக 'இருண்மைச் சுற்றுலா' கண்டறியப்பட்டுள்ளது. இவ்வகை சுற்றுலாவில் போர் நடந்த இடங்கள், கொடூரமான குற்ற நிகழ்வுகள் மற்றும் ஒட்டுமொத்தமாக மக்கள் உயிரிழந்த இடங்கள் ஆகியவற்றிற்கு சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் செல்வதாகும். உதாரணமாக, 'கான்சன்ட்ரேசன்' முகாம்களைக் (concentration camps) கூறலாம். தமிழ்நாட்டில் இருண்மைச் சுற்றுலாவிற்கு அதிக வாய்ப்பு இல்லை. அரியானாவில் குருஷேத்திரா மற்றும் பஞ்சாபில் ஜாலியன் வாலாபாக் ஆகிய இடங்கள் இருண்மைச் சுற்றுலாவிற்கான பகுதிகளாக விளம்பரப்படுத்தப் படுகின்றன. இருப்பினும், நமது நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்காக தமது உயிரைத் தியாகம் செய்த தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர்கள் வாழ்ந்த இடங்களைக் கண்டறிந்து, அங்கு நினைவகங்கள் கட்டி, அவர்களது பங்களிப்பை பெருமைபடுத்துதல் மூலம் இருண்மைச் சுற்றுலாவை மேம்படுத்த இயலும்.



இளைஞர்களின் மனதில் இந்த தியாக உணர்வை விதைக்கும் வகையில், இத்தகைய இடங்களின் மேம்பாட்டிற்காக தமிழ்நாடு சுற்றுலாத்துறை மூலம் நிதிகள் பெறப்பட்டுள்ளன. அவற்றின் விபரம் பின்வருமாறு :–

| வ. எண். | திட்டத்தின் பெயர் | ஒப்பளிப்புத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கன்னியாகுமரி மாவட்டம், தலகுளத்தில் வீரன் வேலுத்தம்பி தளவாய் நினைவக கட்டிட மேம்பாடு | 38.42 |
| 2 | சிவகங்கை மாவட்டம், கல்லல் ஊராட்சி, அரண்மனை சிறுவயலில் உள்ள மருதுபாண்டியர் கோட்டை மேம்பாடு | 12.78 |
| 3 | மருது சகோதரர்களுடன் தொடர்புடைய சிவகங்கை மாவட்டத்திலுள்ள காளையார்கோவில் மேம்பாடு | 17.60 |
| 4 | சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூரில் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் மையம் மேம்பாடு | 54.15 |
| 5 | தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறிலுள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவிட மேம்பாடு | 27.49 |
| 6 | திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள வ.உ.சி. மணி மண்டப மேம்பாடு | 39.06 |
| 7 | பூலித் தேவன் தொடர்புடைய திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சங்கரன் கோவில் பகுதியில் மேம்பாடு செய்தல் | 41.35 |
| 8 | திருநெல்வேலி மாவட்டம், வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த நெற்கட்டும் சேவல் கிராமத்தில் (மாவீரன் பூலித்தேவன் மாளிகை) அடிப்படை வசதிகள் மேம்பாடு | 6.73 |
| 9 | வாஞ்சிநாதன் தொடர்புடைய திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள செங்கோட்டை பகுதி மேம்பாடு | 19.33 |
| 10 | இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பசும்பொன் மேம்பாடு | 33.28 |
| | **மொத்தம்** | **290.19** |

## சுற்றுலா விருதுகள்

### (அ) பன்னாட்டு சுற்றுலா விருதுகள்

2009 சீனாவில் ஹாங் சௌ–ல் நடைபெற்ற 'பாட்டா' (PATA) மாநாட்டில் மாமல்லபுரத்தின் பாரம்பரிய மதிப்பு குறித்து சிறந்த படைப்பு மற்றும் விளம்பரத்திற்காக 'பாட்டா தங்க விருது' என்ற பன்னாட்டு விருது ஒன்றை தமிழ்நாடு சுற்றுலா வென்றுள்ளது.

### (ஆ) தேசீய சுற்றுலா விருதுகள்

தமிழ்நாடு சுற்றுலாத்துறை 2006–2007–ஆம் ஆண்டுக்கு மைய அரசு, சுற்றுலா அமைச்சகத்திடமிருந்து பின்வரும் இனங்களின் கீழ் மூன்று தேசிய சுற்றுலா விருதுகளைப் வென்றுள்ளது.

அ) சிறந்த ஊரகச் சுற்றுலா திட்டம்
ஆ) சிறந்த விளம்பரம்
இ) சிறந்த அரசு சாரா அமைப்பு

2007–2008–ஆம் ஆண்டுக்கு சிறந்த விளம்பரத்திற்காக 'தேசிய சுற்றுலா விருதினை' இத்துறை வென்றுள்ளது.

2008–2009 ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு சுற்றுலா அமைச்சகத்திடமிருந்து பின்வரும் இனங்களின் கீழ் நான்கு தேசிய சுற்றுலா விருதுகளை வென்றுள்ளது.

அ) சுற்றுலா தலத்திற்கான சிறந்த குடிமை மேலாண்மை – தரங்கம்பாடி
ஆ) ஊரகச் சுற்றுலாவை மேம்படுத்தியதற்காக சிறந்த அரசு சாரா அமைப்பு – 'தன் அமைப்பு'
இ) சிறந்த சுற்றுலா நேய துறைமுகம் – சென்னை துறைமுகம்
ஈ) சிறந்த புராதன விடுதி – ஆனந்தம், சுவாமிமலை



### (இ) இதர சுற்றுலா விருதுகள்

தமிழ்நாடு சுற்றுலாத் துறை 2008–2009–ஆம் ஆண்டிற்கு முன்னணி சுற்றுலா வெளியீடுகளிடமிருந்து பின்வரும் விருதுகளை வென்றுள்ளது.

அ) "டுடேஸ் டிராவலர்" பத்திரிக்கையின் 10வது ஆண்டு விழாவின் போது 'பண்பாட்டு சுற்றுலா விருது'.

ஆ) வனவிலங்கு சுற்றுலாவுக்காக (முதுமலைக் காடு) 2009 ஆம் ஆண்டிற்கான CNBC அவாஸ் சுற்றுலா விருது.

இ) "இந்தியாவில் சுற்றுலா மேம்பாட்டுக்கான" சிறந்த மாநிலத்திற்காக 2008–ஆம் ஆண்டு 'ஹாஸ்பிடாலிடி இந்தியா' மற்றும் 'எக்ஸ்ப்ளோர் வேர்ல்டு' ஆண்டு விருது.

## பிரச்சாரம் மற்றும் விளம்பரம்

### சுற்றுலா விவர கையேடுகள்

சுற்றுலாப் பயணிகளுக்கு முக்கிய சுற்றுலா தகவல்களை அளிப்பதற்காக கையேடுகள், புத்தகங்கள், உயர் தொழில்நுட்ப ஊடகப் பொருள்களான குறுந்தகடுகள், 25 நிமிடங்கள் மற்றும் ஆறு நிமிடங்கள் ஓடக்கூடிய டிஜிட்டல் வீடியோ தட்டுகள் ஆகியவற்றை வழங்குவது இன்றியமையாததாகும். 2009–2010–ஆம் ஆண்டில் பின்வரும் கையேடுகள் மற்றும் தமிழ்நாட்டிலுள்ள உலக பாரம்பரியச் சின்னங்கள் குறித்த 'காபி மேசை புத்தகங்கள்' வெளியிடப்பட்டன.

- திருமலை நாயக்கர் மகால்
- செம்மொழிப் பூங்கா மற்றும் மரகதப் பூங்கா
- தமிழ்நாடு வரை படம் (ஆங்கிலத்தில்)

- கன்னியாகுமரி, மதுரை, மாமல்லபுரம், திருச்சிராப்பள்ளி, சிதம்பரம், ஏற்காடு, காஞ்சிபுரம், குற்றாலம் மற்றும் தஞ்சாவூர் (ஆங்கிலம் மற்றும் தமிழில்), மருத்துவ சுற்றுலா (ஆங்கிலம் மற்றும் இந்தி)
- பாரம்பரிய இடங்கள் குறித்த சுவரொட்டிகள்
- சி.டி. ரோம் (சுற்றுலா காட்சி)
- அரசு அருங்காட்சியகம் (சென்னை)
- தமிழ்நாட்டின் அருவிகள்
- சாகசச் சுற்றுலா
- சுற்றுலா செய்தி மடல்களின் தொகுப்பு
- 2006, 2007 மற்றும் 2008 ஆண்டுகளில் வெளியிடப்பட்ட அரசாணைகளின் தொகுப்பு (பல்வேறு சுற்றுலா திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கி வெளியிடப்பட்ட அரசாணைகளின் தொகுப்பு)

மாநிலத்தின் சுற்றுலா வளங்களை வெளிக்கொணரும் வகையில் பொதுவான ஒரு கருப்பொருளுடன், 2007 ஆம் ஆண்டு முதல் வண்ணமிகு நாட்காட்டிகளை வெளியிட்டு வருகிறது. 2010ம் ஆண்டிற்கான நாட்காட்டி ''தமிழ்நாட்டின் இனிய தலங்கள்'' என்ற கருப்பொருளுடன் தமிழ்நாட்டிலுள்ள 12 மலை வாழிடங்களின் வண்ணமிகு காட்சிகளைக் கொண்டதாகும்.

முக்கிய சுற்றுலா வளங்கள் குறித்து விளம்பரம் செய்தல், வெளியீடுகள் வழங்குதல் போன்ற புதுமையான அணுகுமுறை, சுற்றுலா பயணிகளிடையே வரவேற்கத்தக்க தாக்கத்தை உண்டாக்கியதுடன், 2009–ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயணிகளின் வருகையை 24.4 விழுக்காட்டிற்கும் அதிகமாக உயர்த்தியுள்ளது.



**சுற்றுலா செய்தி மடல்**

முக்கிய நிகழ்வுகளை பல்வேறு பகுதிகளில் விளம்பரப்படுத்தவும், சுற்றுலாப் பயணிகள் வருகையை அதிகரிக்கும் அனுகூலத்தை பெறவும், முக்கிய நிகழ்வுகளை பதிவு செய்தல் அவசியமாகும். அதற்காக மாதாந்திர சுற்றுலா செய்தி மடல் தமிழக சுற்றுலாத்துறையால் 2007 ஆம் ஆண்டு முதல் வெளியிடப்பட்டு வருகிறது. இவ்வெளியீடு அனைத்து மாநில அரசு மற்றும் இந்திய அரசு சுற்றுலா அலுவலகங்கள், நாடெங்குமுள்ள தமிழ்நாடு சுற்றுலா அலுவலகங்கள், பயணம் நடத்துபவர்கள், பயண முகவர்கள் மற்றும் விடுதி உரிமையாளர்கள் அனைவருக்கும் விநியோகிக்கப்படுகின்றன. சுற்றுலாத்துறையில் நடைபெறும் நிகழ்ச்சிகள் மற்றும் முக்கிய சுற்றுலா சார்ந்த நிகழ்வுகள் அனைத்தும் இம்மடலில் முன்னுரிமைப் படுத்தப்படுகின்றன.

தகவல் சேவையை வேகப்படுத்த, சிறப்பு பதிப்புகளும், உயர் தொழில் நுட்ப மின்னணு பொருட்களும் 2010–2011–ஆம் ஆண்டில் தயாரிக்கப்படும்.

**தயாரிக்கப்பட்டுள்ள சுற்றுலா சார்ந்த வெளியீடுகள் விபரம்**

- இராமலிங்க விலாசம் நினைவு அரண்மனை/ வீரபாண்டிய கட்டபொம்மன் கோட்டை கட்டிடம் குறித்த மடிப்பேடு
- இராஜராஜ சோழனின் வரலாறு குறித்த மடிப்பேடு
- 200 புகைப்படங்கள் அடங்கிய குறுந்தகடு
- அழகிய காகிதப் பைகள்
- தமிழ்நாடு வரைபடங்கள் (தமிழில்)
- தமிழ்நாடு சுற்றுலா (மறு அச்சீடுகள்)
- அனைத்து சுற்றுலா இடங்களின் மடிப்பேடுகள் (மறு அச்சீடுகள்)
- ஏலகிரி குறித்த மடிப்பேடு
- தமிழக கைவினைப் பொருட்கள் குறித்த மடிப்பேடு

- தமிழ்நாட்டின் கடற்கரைகள்குறித்த மடிப்பேடு
- மாவட்ட வாரியான சுற்றுலா மடிப்பேடுகள் (தமிழில்)
- மலை வாழிடங்கள் குறித்த சுவரொட்டிகள்
- கிராம வளம் குறித்த சுவரொட்டிகள்
- அருவிகள் குறித்த சுவரொட்டிகள்
- கடற்கரைகள் குறித்த சுவரொட்டிகள்
- செம்மொழி சிற்பப் பூங்கா குறித்த சுவரொட்டிகள்

**தூரிகையில் தமிழகம்**

சுற்றுலாத்துறை தனியார் ஒத்துழைப்புடன் தமிழ்நாட்டின் கலை மற்றும் பண்பாட்டை சித்தரிக்கும் வகையில் பல்வேறு சுற்றுலாத் தலங்களையும் உள்ளடக்கிய ஓவியங்கள் தீட்டப்பட்டு **"தூரிகையில் தமிழகம்"** என்ற அழகிய 'காபி மேசை புத்தகம்' மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 27–11–2009 அன்று வெளியிடப்பட்டது. பிரபல ஓவியர்களால் தீட்டப்பட்ட அழகிய ஓவியங்களைக் கொண்ட இந்த புத்தகம், தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு மற்றும் ஜெர்மானிய மொழிகளில், அவற்றிலுள்ள ஓவியங்கள் குறித்த சிறு தகவல்களுடனும், தமிழ்நாட்டில் அவற்றின் முக்கியத்துவம் குறித்தும் வெளியிடப்பட்டுள்ளன.

**"மாமல்லபுரம் மரகதப் பூங்கா"**

யுனெஸ்கோ நிறுவனத்தால் உலகப் புராதன மையமாக அறிவிக்கப்பட்டுள்ள மாமல்லபுரத்தில், ஐந்து ரதங்கள் பகுதிக்குச் செல்லும் சாலையில், ரூ.60 இலட்சம் செலவில் திறந்த வெளி அரங்கம், அழகிய புல்வெளிகள், பெஞ்சுகள் போன்ற பொழுதுபோக்கு வசதிகளுடன் "மரகதப் பூங்கா" என்ற பெயரில் அழகிய பூங்கா ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 25–12–2009 அன்று தமிழக அரசின் மாண்புமிகு. துணை முதல்வர் அவர்களால் சுற்றுலாப் பயணிகளுக்காக திறந்து வைக்கப்பட்டது. மாமல்லபுரத்தில் வேறு பூங்கா ஏதுமில்லை என்பதால், இது சுற்றுலாப் பயணிகளிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.



**சுற்றுலா பெருந் திட்டம்**

தமிழக சட்டப் பேரவையில் 24–5–2006 அன்று மேதகு. தமிழக ஆளுநர் அவர்கள் தனது உரையின் போது, சுற்றுலாவின் வளத்தை உணர்ந்து, வேகமாக அதிகரித்து வரும் சுற்றுலாப் பயணிகள் வருகைக்கேற்ப தேவையான சுற்றுலா உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட தமிழகத்திற்கான "சுற்றுலா பெருந்திட்டம்" என்ற ஒரு திட்டம் தயாரிக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

அதன்படி, தமிழகத்திற்கான சுற்றுலா பெருந்திட்டம் தயாரிக்கும் பணி சென்னையிலுள்ள திருவாளர்கள். ஹட்கோ நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. விரிவான கள ஆய்வுகளுக்குப் பின்னர் ஹட்கோ நிறுவனத்தால் பெருந்திட்டம் தயாரிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த பெருந்திட்டத்தின் அடிப்படையில் பல்வேறு சுற்றுலா இடங்களுக்கான திட்டங்கள் இறுதி செய்யப்பட்டு, இதற்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டை அரசிடமிருந்து பெற்று அவ்விடங்களில் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

**விளம்பர முகாம்**

தமிழ்நாட்டின் சுற்றுலா சிறப்பியல்புகளை, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் இரயில் மற்றும் சாலை பயணத் திட்டத்தை மையப்படுத்தி 2009–2010–ஆம் ஆண்டில், பெங்களூரு, புவனேஷ்வர், புதுடெல்லி, கொல்கத்தா, மைசூர், அகமதாபாத் ஆகிய இடங்களிலுள்ள ஓட்டல்களில் நடத்தப்பட்ட சிறப்பு விளம்பர முகாம்கள் மூலமாக அதிகமான சுற்றுலாப் பயணிகள் தமிழகத்திற்கு வந்தனர். இத்தகைய முகாம்கள் 2010–2011–ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நடத்தப்படும். மேலும், பின்வரும் இடங்களிலும் விளம்பர முகாம்கள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

* நாக்பூர் மற்றும் ஷீரடி – மகாராஷ்டிரம்
* வதோதரா – குஜராத்
* போபால் – மத்தியப் பிரதேசம்
* மணாலி (குல்லு) – இமாச்சலப் பிரதேசம்

**சுற்றுலா விழிப்புணர்வு**

சுற்றுலா தொழில் புரிவோர், விடுதி உரிமையாளர்கள், பயண முகவர்கள், சீருந்து மற்றும் ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள், வணிகர்கள், காவலர்கள், கோவில் பணியாளர்கள் மற்றும் விமான நிலையப் பணியாளர்கள் ஆகியோர் முனைப்புடன் செயல்பட பயிற்சித் திட்டத்தை தமிழ்நாடு சுற்றுலா நடத்தியுள்ளது. இந்த பயிற்சித் திட்டங்கள், சென்னை, தருமபுரி, சேலம், ஈரோடு, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், விழுப்புரம், வேலூர், காஞ்சிபுரம், கடலூர், கன்னியாகுமரி, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் நடத்தப்பட்டன. இத்தகைய முயற்சிகளின் வாயிலாக முக்கிய பங்காற்றும் சீருந்து மற்றும் ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்களிடையே பொறுப்பான முறையில் பொதுமக்களின் மனங்களில் சுற்றுலாவின் முக்கியத்துவத்தை உணர்த்தவும், சுற்றுலாப் பயணிகளை நட்புடன் நடத்தும் நற்பண்பை மேம்படுத்துவதிலும் துறை வெற்றி கண்டுள்ளது. இது சுற்றுலாப் பயணிகள் தங்கிச் செல்லும் நாட்களை நீட்டிக்கச் செய்ததுடன், அதிக அளவு பயணிகளை மீண்டும் இங்கு வந்து செல்லத் தூண்டுகிறது.

இதே போன்று, சுற்றுலாத் தலங்கள் ஒரு சிலரால் சேதப்படுத்தப்படுவதிலிருந்து பாதுகாத்திட, விளம்பர முகாம்கள் மற்றும் விழிப்புணர்வு ஊர்வலங்கள் பல்வேறு பகுதிகளில் நடத்தப்பட்டன. முக்கியமான சுற்றுலா மையங்களில் இத்தகைய முகாம்களை நடத்த தமிழ்நாட்டிலுள்ள மாவட்ட நிர்வாகம் மூலம் நடவடிக்கைகள் பல எடுக்கப்பட்டுள்ளன. தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் சேதமேற்படுவதை தடுக்க மேற்கொள்ளவேண்டிய வழிமுறைகளை வகைப்படுத்திட, மாநில தொல்லியல் துறையின் ஒத்துழைப்போடு, சென்னையில் 4–8–2009 அன்று கருத்தரங்கு ஒன்றும் நடத்தப்பட்டது. சுற்றுலா



குறித்த கலந்துரையாடல் மற்றும் பயிலரங்கங்கள் சுற்றுலாத்துறை மூலம் நடத்தப்பட்டு, அதன்மூலம் சுற்றுலா குறித்த செய்திகள் பொது மக்களுக்கு சென்றடைய ஏற்பாடு செய்யப்பட்டது.

**சுற்றுலா நட்பு வாகனம்**

சுற்றுலா நட்பு வாகனம் எனும் சிறப்பான புதிய திட்டம் 2007–2008–ஆம் ஆண்டு தமிழகத்தில் தொடங்கப்பட்டது. சுற்றுலா நட்பு வாகனம் திட்டத்தில் சேர விரும்பும் ஆட்டோ ஓட்டுநர்களின் தகுதி, நன்னடத்தை குறித்த பின்னணி விவரங்களை காவல் மற்றும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் சரிபார்க்கப்பட்ட பின்னர், இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டனர். தகுதி பெற்ற ஓட்டுநர்களுக்கு, சுற்றுலாத் தலங்கள் குறித்தும், தகவல் தொடர்பு, உடலசைவு மொழி போன்ற சமூக திறன்கள் மற்றும் அது சார்ந்த இனங்கள் தொடர்பாக உரிய பயிற்சி வழங்கப்பட்டது. சுற்றுலாப் பயணிகளுக்கு விநியோகிக்க சுற்றுலா வரைபடங்கள் மற்றும் கையேடுகள் அவர்களிடம் வழங்கப்பட்டன.

சென்னையில் 39 ஆட்டோ ரிக்ஷாக்களுடனும், கன்னியாகுமரியில் 18 ஆட்டோ ரிக்ஷாக்களுடனும் முதற்கட்டமாக "சுற்றுலா நட்பு வாகனம்" திட்டம் தொடங்கப்பட்டது. இரண்டாம் கட்டமாக, கூடுதலாக 24 ஆட்டோ ரிக்ஷாக்கள் சென்னையில் இணைந்தன. மூன்றாம் கட்டமாக சென்னையில் 25, திருநெல்வேலி குற்றாலம் வட்டாரத்தில் 28, மதுரையில் ஏழு, திருச்சிராப்பள்ளியில் 26 மற்றும் திருநெல்வேலியில் 20 ஆட்டோ ரிக்ஷாக்களும் இணைந்தன. இத்திட்டத்தில் இணைக்கப்பட்ட ஆட்டோ ரிக்ஷாக்கள் போக்குவரத்து துறையின் ஒப்புதலுடன் சுற்றுலாத் தலங்களின் புகைப்படங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. சென்னையில், சுற்றுலா நட்பு வாகனமாக, தமிழ்நாட்டில் முதன் முறையாக 39 ஆட்டோ ரிக்ஷாக்கள் அனுமதி பெற்றன. மொத்தத்தில் 210 ஆட்டோ ரிக்ஷாக்கள் இந்த சிறப்பான திட்டத்தில் பங்கேற்றுள்ளன. இத்திட்டத்தில் மேலும் 60 ஆட்டோ ரிக்ஷாக்கள் விரைவில் இணையவுள்ளன.

**பிளாஸ்டிக் இல்லாத மண்டலங்கள்**

தமிழ்நாடு மாநிலம் 1058 கி. மீ. தொலைவுள்ள அழகான கடற்கரையைக் கொண்டுள்ளது. இக்கடற்கரைகள் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பராமரிக்கப்பட வேண்டியது அவசியமாகும். மேலும் தூசி மற்றும் குப்பைக் கூளங்களிலிருந்து இக்கடற்கரையைக் காப்பது உள்ளூர்வாசிகளின் கடமையுமாகும். உள்ளாட்சி அமைப்புகளின் ஒத்துழைப்புடன், கடற்கரையை சுத்தம் செய்வதற்கான முயற்சிகளை தமிழ்நாடு சுற்றுலாத்துறை மேற்கொண்டுள்ளது. பிளாஸ்டிக் இல்லாத மண்டலம் குறித்த முகாம்கள் மாநிலம் முழுவதும் நடத்தப்பட்டன.

**கூட்டம், ஊக்கம், கருத்தரங்கு மற்றும் பொருட்காட்சி சந்தை**

தமிழ்நாடு சுற்றுலா 2009–10–ஆம் ஆண்டில், மருத்துவச் சுற்றுலா, பொறுப்புணர்வு சுற்றுலா மற்றும் நினைவுச் சின்னங்களைப் பாதுகாப்பது ஆகியன குறித்த கருத்தரங்கங்களையும், மாநாடுகளையும் சென்னையில் நடத்தியது. கூட்டம், ஊக்கம், மாநாடு மற்றும் கண்காட்சி (MICE MARKET) சந்தை தொடர்பான சுற்றுலா, சென்னை வர்த்தக மையத்தின் வாயிலாக மேம்படுத்தப்படும்.

மாமல்லபுரத்தில் உள்ள புனரமைக்கப்பட்ட கடற்கரை விடுதி வளாகத்தில் பல்வேறு அரசுத் துறைகள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் அரசு சாரா அமைப்புகள் ஆகியவற்றால் இதுபோன்ற MICE சார்ந்த கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

**மருத்துவச் சுற்றுலா மேம்பாட்டிற்கான கருத்தரங்குகள்**

சென்னையில், மருத்துவச் சுற்றுலா வளம் குறித்த விழிப்புணர்வை உருவாக்குவதற்கு, 27–2–2009 அன்று மருத்துவச் சுற்றுலா குறித்த கருத்தரங்கு நடத்தப்பட்டது.



"சுற்றுலா மேம்பாட்டில் கூட்டாண்மைத் துறைகளின் பங்கு" என்ற தலைப்பின் கீழ், சென்னையில், 6–3–2009 அன்று கருத்தரங்கு நடத்தப்பட்டது. நல்வாழ்வு சுற்றுலா, கலாச்சார சுற்றுலா, நெடுஞ்சாலை சுற்றுலா, கல்விச் சுற்றுலா, ஊரகச் சுற்றுலா குறித்த கருத்துக்களை, பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகளும் சுற்றுலாப் பொறுப்பாளர்களும் முன்வைத்தனர். தமிழகத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் இங்குள்ள சிறப்பான மருத்துவ வசதிகளை பயன்படுத்துவதை அதிகரித்திட, அக்டோபர் 2009ல் சுற்றுலாத்துறையால் மருத்துவச் சுற்றுலா கூட்டம் (மெடி டூர் மீட்) நடத்தப்பட்டது.

**வெளிநாட்டு சுற்றுலா சந்தைகளில் பங்கேற்றல்**

1. "சார்க்" வர்த்தகப் பொருட்காட்சி
2. பாட்டா கருத்தரங்கு (பசிபிக் ஆசியா பயணக் கருத்தரங்கு – PATA)
3. உலகச் சுற்றுலா சந்தை
4. பன்னாட்டு சுற்றுலா சந்தை

**"சார்க்" வர்த்தகப் பொருட்காட்சி**

மண்டலங்களுக்கு இடையிலான வர்த்தகத்தையும், ஒத்துழைப்பையும் மேம்படுத்துவதற்கு, ஒவ்வொரு ஆண்டும் வெவ்வேறு உறுப்பினர் நாடுகளில் ஆண்டு நிகழ்வுகளாக "சார்க்" வர்த்தகப் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன. 2009–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பூடானின் தலைநகரான திம்புவில் நடத்தப்பட்ட "சார்க்" வர்த்தகப் பொருட்காட்சியில் தமிழ்நாடு சுற்றுலாத் துறை பங்கேற்றது.

**"பாட்டா'" (பசிபிக் ஆசியா பயணக் கருத்தரங்கு)**

2009 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில், சீனாவில் உள்ள ஹாங் செள என்ற நகரத்தில் நடைபெற்ற 'பாட்டா' சந்தையில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை பங்கேற்று, தமிழக சுற்றுலாச் செல்வங்களையும், இங்குள்ள உலகத்தரம் வாய்ந்த, குறைந்த

செலவின மருத்துவ வசதிகளையும் எடுத்துக் கூறியது. பிற சுற்றுலா பயணத் திட்டங்களுடன், மருத்துவச் சுற்றுலா விருந்தோம்பல் திட்டத்திற்கும் வெளிநாடுகளிலிருந்து பெரும் வரவேற்பு உள்ளது. தமிழ்நாடு சுற்றுலா, நமது மாநிலத்திலுள்ள சுற்றுலா செல்வங்களை உயர் தொழில்நுட்ப ரீதியில் எடுத்துக் கூறியது.

**உலகச் சுற்றுலா சந்தை, லண்டன்**

ஒவ்வொரு நவம்பர் மாதத்திலும் லண்டனில், உலக சுற்றுலாப் பயணச் சந்தை நடைபெறுகிறது. 2009–ஆம் ஆண்டில், லண்டன் நகரில் நடைபெற்ற உலக சுற்றுலாச் சந்தையில் தமிழ்நாடு சுற்றுலாத் துறை பங்கேற்றது. இதில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகள் பங்கு கொண்டன. தமிழ்நாட்டின் சுற்றுலாச் செல்வங்களும், சுற்றுலா வளர்ச்சிக்கு தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் முயற்சிகளும் சிறப்பம்சங்களாக தெரிவிக்கப்பட்டன. தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் பொறுப்பாளர்கள் உலக சுற்றுலாச் சந்தையில் பங்கேற்க ஊக்குவிக்கப்பட்டு, அவர்களுக்குத் தேவையான உதவிகளும் வழங்கப்பட்டன. இந்த முயற்சி, தமிழ்நாட்டிற்கு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை கணிசமான அளவில் உயர வழி வகுத்தது.

**பன்னாட்டுச் சுற்றுலா சந்தை, பெர்லின்**

2008–ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில், ஜெர்மனியில் பெர்லின் நகரில் நடைபெற்ற பன்னாட்டு சுற்றுலாச் சந்தையில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை பங்கேற்றது. தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு வகையான சுற்றுலா முக்கியத்துவங்களை இச்சந்தையில் கலந்து கொண்ட முக்கிய பிரமுகர்களிடையே காண்பிக்க இச்சந்தை உதவியது. தமிழ்நாடு சுற்றுலா அரங்கில் ஏற்பாடு செய்யப்பட்ட, தமிழ்நாட்டின் கலை வடிவங்களை எடுத்தியம்பும் கிராமிய நடன நிகழ்ச்சி அனைவரையும் கவர்ந்தது.



2010 ஆம் ஆண்டிலும், ஜெர்மனியில் உள்ள பெர்லின் நகரில் நடைபெற்ற பன்னாட்டு சுற்றுலாச் சந்தையில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை பங்கேற்றது. தமிழ்நாடு அரங்கில் உள்ளூர் தமிழர்கள் பங்கேற்புடன் நடத்தப்பட்ட தமிழிசை மற்றும் நடன பொழுதுபோக்கு நிகழ்ச்சி, அங்கு வழங்கப்பட்ட திருநெல்வேலி அல்வா மற்றும் கார வகைகள் ஆகியனவும் பெரும் ஆர்வத்தை உண்டாக்கின.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை அதிக எண்ணிக்கையில் தமிழ்நாட்டிற்கு வரவழைக்க, தமிழ்நாடு சுற்றுலாத்துறை பின்வரும் வெளிநாட்டு சுற்றுலாச் சந்தைகளிலும் பங்கேற்க உள்ளது.

1. பசிபிக் ஆசியா பயண முகவர் மாநாடு
2. உலக சுற்றுலா பயணச் சந்தை, லண்டன்
3. பன்னாட்டு சுற்றுலா சந்தை, பெர்லின்

மேலும் மொரிஷியஸ் மற்றும் தென் ஆப்பிரிக்க நாடுகளில் சுற்றுலாவை சந்தைப்படுத்தும் கூட்டங்களை ஏற்பாடு செய்ய உள்ளது.

**தேசிய சுற்றுலா சந்தைகளில் பங்கேற்றல்**

இந்த நோக்கம் ஒருங்கிணைந்த சந்தை வினைமுறைத் திறம் மற்றும் பயணத் தொழில் புரிவோரின் கூட்டு முயற்சியுடன் நடத்தப்படும் முகாம்கள் மூலம் நிறைவேற்றப்படுகிறது. பெரும்பாலான சுற்றுலாப் பயணச் சந்தைகளிலும், பிற மாநில சுற்றுலாத்துறை மற்றும் சுற்றுலா ஆர்வலர்களால் நடத்தப்படும் சுற்றுலா கண்காட்சிகளிலும் தமிழ்நாடு சுற்றுலாத்துறை பங்கேற்றுள்ளது.

2009–ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் சென்னையிலும், 2010–ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் புது தில்லியிலும் நடைபெற்ற 'வெளிநாடு வாழ் இந்தியர் தின விழாவில்', தமிழ்நாடு சுற்றுலாத் துறை பங்கேற்று நடத்திய பண்பாட்டு விழாவில் தமிழ்நாட்டிலுள்ள கலைகளும் கவின்கலைகளும் இடம் பெற்றன.

**'சாத்தே, புது தில்லி'**

வளர்ந்து வரும் நாடுகள் மற்றும் வெளிநாடுகளுடனான வாங்குபவர்–விற்பவர் தொடர்புகளை மேம்படுத்த நடத்தப்படும் 'சாத்தே' (தெற்காசிய பயண மற்றும் சுற்றுலா கண்காட்சி)–ல் தமிழ்நாடு சுற்றுலாத் துறை தொடர்ந்து பங்கேற்று வருகிறது.

**'மாபெரும் இந்திய பயண அங்காடி, ஜெய்ப்பூர்'**

இராஜஸ்தான் மாநில சுற்றுலாத் துறை, இந்திய வணிக நிறுவனங்களின் கூட்டமைப்புடன் (FICCI) இணைந்து ஜெய்ப்பூரில் நடத்திய மாபெரும் இந்திய பயண அங்காடியில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை கலந்து கொண்டது. இந்த வாங்குபவர்–விற்பவர் சந்திப்பு குறித்து, வாங்குபவர்களிடமிருந்து அதிக வரவேற்பு இருந்தது.

**பொருட்காட்சிகள் மற்றும் விழாக்கள்**

தமிழக மாநிலம், வாழ்வு அனுகூலப் போக்குடனான பல்வேறு விழாக்களுக்கும் பொருட்காட்சிகளுக்கும் பெயர் பெற்றதாகும். விழாக் கொண்டாட்டம் தமிழ் பண்பாட்டின் ஒரு பகுதியாகும். இவை அனைத்து காலங்களையும் சிறந்ததாக அமைக்கின்றன. எனவே, பொருட்காட்சி மற்றும் விழாக்கள் அப்பகுதி மக்களை அதிக அளவில் கவர்ந்திழுத்து, பொழுதுபோக்கிற்கும் மகிழ்ச்சிக்கும் வழிவகை செய்யும் நடவடிக்கையாக உள்ளன.



பண்பாடு, இசை மற்றும் நடன நிகழ்ச்சிகள் விழாக்கால உணர்வை ஏற்படுத்துவதோடு, வரும் மக்கள் கூட்டத்திற்கு ஆரோக்கியமான பொழுதுபோக்காக அமைகிறது.

2009–2010ம் ஆண்டில் பின்வரும் விழாக்கள் மற்றும் நிகழ்ச்சிகள் தமிழ்நாடு சுற்றுலாத் துறையால் நடத்தப்பட்டன.

**இந்திய அரசு உதவியுடன் நடத்தப்பட்ட விழாக்கள்**

- மாமல்லபுரத்தில் இந்திய நாட்டிய விழா – டிசம்பர் 25 முதல் சனவரி 25 முடிய
- தேசிய சுற்றுலா (ம) பண்பாட்டு விழா, கன்னியாகுமரி – சனவரி
- தேசிய புனித பயணியர் திருவிழா, இராமேசுவரம் – சனவரி

**மாநில அரசு உதவியுடன் நடத்தப்படும் விழாக்கள்**

தமிழகத்தின் பாரம்பரியமிக்க பண்பாட்டை எடுத்தியம்பும் வகையில் பின்வரும் விழாக்கள் ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றன.

- இந்தியா முழுவதும் பொங்கல் சுற்றுலா விழா – சனவரி
- செட்டிநாடு விழா, காரைக்குடி – சனவரி
- இலக்கிய சுற்றுலா விழா, எட்டயபுரம், தூத்துக்குடி – பிப்ரவரி
- சித்திரை விஷு விழா, பாபநாசம் – ஏப்ரல்
- தேயிலை மற்றும் சுற்றுலா விழா, உதகமண்டலம் – ஏப்ரல்
- சித்திரை நாட்டிய விழா, மதுரை – மே
- சித்திரை முழு நிலவு விழா, பூம்புகார் – மே
- கட்டபொம்மன் விழா, பாஞ்சாலங்குறிச்சி – மே
- சலங்கை நாதம் மற்றும் பாகவத மேளா, தஞ்சாவூர் – மே
- மாங்கனி விழா, கிருஷ்ணகிரி – மே
- மலை வாழிடங்களில் கோடை விழா – மே
- கந்தூரி விழா, நாகூர் – மே
- சாரல் திருவிழா, குற்றாலம் – ஜூலை
- திற்பரப்பு விழா, கன்னியாகுமரி மாவட்டம் – ஜூலை
- ஆடிப்பெருக்கு விழா, ஒகேனக்கல் – ஜூலை

- வேளாங்கன்னி விழா, வேளாங்கன்னி – ஆகஸ்ட்
- அனைத்து சுற்றுலாத் தலங்களிலும் உலக சுற்றுலா தினம்–செப்டம்பர்
- தசரா பண்டிகை, கிருஷ்ணாபுரம், பாளையங்கோட்டை– அக்டோபர் / நவம்பர்
- மாமன்னன் இராசராசன் சதய விழா, தஞ்சாவூர் – அக்டோபர்
- திருவண்ணாமலை தீபத் திருவிழா – நவம்பர்

தமிழ்நாடு சுற்றுலா மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் வேலூரில் நடைபெறும் அரசுப் பொருட்காட்சிகள் அனைத்திலும் கலந்து கொண்டு, தமிழ்நாட்டின் சுற்றுலா வளத்தையும், மாவட்டங்களில் அதிகம் பிரபலமடையாத தலங்கள் குறித்தும் எடுத்துக் கூறியது. சுற்றுலா மற்றும் பயணச் சந்தைகள் மற்றும் நாடெங்கும் நடத்தப்பட்ட பொருட்காட்சிகளில் தமிழ்நாடு சுற்றுலாத்துறை கலந்து கொண்டு மாநிலத்தில் உள்ள வளமான சுற்றுலா முக்கியத்துவங்களை சிறப்புக் கூறாக சித்தரிக்கிறது.

**உலக சுற்றுலா தின கொண்டாட்டங்கள்**

2009 ஆம் ஆண்டின் உலக சுற்றுலா தினக் கருப்பொருள் ‘சுற்றுலாவை பல்வகையில் கொண்டாடுதல்’ என்பதாகும். தூய்மைப்படுத்தும் முகாம், சுற்றுலா விழிப்புணர்வு முகாம் மற்றும் சுற்றுலா நட்புணர்வு முகாம் போன்ற எண்ணற்ற முயற்சிகளை இத்துறை சென்னை மற்றும் ஏனைய மாவட்டங்களிலுள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களில் மேற்கொண்டது.

**இந்திய நாட்டிய விழா 2010**

உள்ளூர் கலை வடிவங்களை கொண்டாடும் வகையில் மாமல்லபுரத்தில் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர்–சனவரி மாதங்களில் நாட்டிய விழாவை தமிழ்நாடு சுற்றுலாத்துறை நடத்தி வருகிறது. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் உள்ளூர் மக்களிடம் இதற்குக் கிடைத்த அதீத வரவேற்பைத் தொடர்ந்து, இரண்டாம் முறையாக 2009ம் ஆண்டும் இவ்விழா ‘இந்திய நாட்டிய விழா’ என 2009 டிசம்பர் மாதம் 25 ஆம் தேதி முதல் 2010 சனவரி மாதம் 25ம் தேதி வரை, நாட்டிலுள்ள சிறந்த கலைஞர்களுக்கு



வாய்ப்பு தந்து, நடத்தப்பட்டது. தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, கேரளா, புதுச்சேரி, ஜார்கண்ட், நாகாலாந்து, மணிப்பூர், ராஜஸ்தான், ஒரிசா, மிசோரம், சிக்கிம், அசாம், மேற்கு வங்காளம், அருணாசலப் பிரதேசம், கோவா மற்றும் இமாச்சலப் பிரதேசம் ஆகிய இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து சிறந்த கலைஞர்களை வரவழைத்து நடன நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. மேலும், தென்மண்டல பண்பாட்டு மையம், கலை பண்பாட்டுத் துறை மற்றும் அரசு இசைக் கல்லூரி, சென்னை ஆகியவற்றின் ஒத்துழைப்போடு பல்வேறு நடன நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. இவை சுற்றுலாப் பயணிகளுக்கு பெரும் மகிழ்ச்சியை அளித்தன.

இது தவிர, பல்வகை தமிழக கலை நிகழ்ச்சிகள் கொண்ட ‘நமது புராதனத்திற்கு ஒரு இசைப் பயணம்’ என்ற ஒரு மாபெரும் துவக்க விழா நிகழ்ச்சியும் நடத்தப்பட்டது.

**பண்பாட்டு விழா**

ஆண்டுதோறும் டிசம்பர் மற்றும் சனவரி மாதங்களில், பல பண்பாட்டு இசை நடன நிகழ்ச்சிகளால் சென்னை பொலிவு பெறுகிறது. குறிப்பாக சனவரி மாதத்தில் நடத்தப்படும் "சென்னை சங்கமம்"

எனப்படும் பெரும் விழா சுற்றுலாப் பயணிகளையும், சென்னை வாசிகளையும் பெரிதும் கவர்கிறது. ஒரு வாரம் நடத்தப்பட்ட விழாவில் 2000க்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கு பெற்றனர். இம்மாபெரும் நிகழ்வு, குறிப்பாக கிராமியக் கலை நிகழ்ச்சிகளுக்கு புத்துணர்வூட்டியுள்ளது. இது போன்ற கிராமியக் கலை நிகழ்ச்சிகளை அதிகம் கண்டிராத நகரவாசிகள், இதனை முழுமையாக கண்டு களித்தனர். மேலும் இந்நிகழ்ச்சிகள் நடைபெற்ற போது அச்சூழல் விழாக்கால உணர்வை ஏற்படுத்தியது. மேலும் தமிழக உணவு வகைகளை பிரபலப்படுத்தும் வகையில் நடத்தப்பட்ட ‘உணவுத் திருவிழா’ பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. திருநெல்வேலி மாவட்டம் எட்டயபுரத்தில் ‘‘முப்பெரும் இலக்கிய விழா’’ கொண்டாடப்பட்டது.

## விளம்பரங்கள்

தமிழ்நாடு சுற்றுலாத்துறையால் விளம்பர முகாம்கள் நடத்தப்பட்டன. அவை குறித்து பல்வேறு உள்நாட்டு மற்றும் பன்னாட்டு விமானப் பயணங்களில் வழங்கப்படுகிற இதழ்கள், முன்னணி பயண இதழ்கள் ஆகியவற்றில் வெளியிடப்பட்டன.

எஃப். வி. டபிள்யூ. இன்டர்நேஷனல், கான்டி நாஸ்ட் டிராவலர், ஏசியன் வாய்ஸ், குஜராத் சமாச்சார் (இங்கிலாந்து), டெஸ்டின் ஏசியன், டெலகிராப் (இங்கிலாந்து), ஜலான் ஜலான் (இந்தோனேஷியா), டூரிஸ்டிக் ஆக்சுவல், ஜியோ செய்சன், பட்ஜெட் டிராவலர் (அமெரிக்கா), ஹை லைப் (பிரிட்டிஷ் ஏர்வேஸ்), சில்வர் கிரிஸ் (சிங்கப்பூர் ஏர்லைன்ஸ்), கோயிங் பிளேசஸ் (மலேசியன் ஏர்லைன்ஸ்), கருடா (இந்தோனேஷியன் ஏர்லைன்ஸ்), ஹாலந்து ஹெரால்டு (கே.எல்.எம். எர்வேஸ்), நமஸ்கார் (ஏர் இந்தியா-இன்டர்நேஷனல்), ஜெட் விங்ஸ் இன்டர்நேஷனல் (ஜெட் ஏர்வேஸ்) போன்ற பன்னாட்டு பத்திரிகைகளிலும், பன்னாட்டு விமானப் பயணங்களில் வழங்கப்படும் பத்திரிகைகளிலும் விளம்பரங்கள் வெளியிடப்பட்டன.

ஸ்வாகத் (ஏர் இந்தியா-டொமஸ்டிக்), விண்டோ எய்ல்ஸ் (பாராமவுண்ட் ஏர்வேஸ்), ஜெட் விங்ஸ் (ஜெட் ஏர்வேஸ்), ஹை லிவிங் (கிங் பிஷர் ஏர்லைன்ஸ்), ஸ்பைஸ் ரூட் (ஸ்பைஸ் ஜெட்), அவுட்லுக் டிராவலர், ஹாஸ்பிடாலிடி இந்தியா, எக்ஸ்பிரஸ் டிராவல், ஏசியன் டிராவலர், டுடேஸ் டிராவலர், தி சண்டே இந்தியன், பிஸினஸ் அண்டு எகனெமி, இன்கிரெடிபிள் இந்தியா, ஜியோ, இந்தியா டுடே டிராவல் பிளஸ் முதலிய பல்வேறு உள்நாட்டு விமானப் பயணங்களில் வழங்கப்படும் பத்திரிகைகளிலும், பயணப் பத்திரிகைகளிலும் விளம்பரங்கள் வெளியிடப்பட்டன.

கோடை விழா, இந்திய நாட்டிய விழா, சாரல் விழா போன்ற குறிப்பிட்ட நிகழ்வுகளைப் பற்றிய விளம்பரங்கள், முன்னணி தேசீய நாளேடுகளிலும், பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டன.



உள்நாட்டு சுற்றுலா சார்ந்த உள்ளூர் நிகழ்ச்சிகள் மற்றும் விழாக்கள் குறித்த காலமுறை விளம்பரங்களும் வட்டார நாளிதழ்கள் மற்றும் பத்திரிகைகளில் விளம்பரப் படுத்தப்படுகின்றன. அவற்றில் பத்திரிகைச் செய்திகள் கவர்ந்திழுக்கும் முறையில் தொடர்ந்து வெளியிடப்படுகின்றன.

## சுற்றுலா கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்

முதல்தர சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்காக சுற்றுலா சார்ந்த இடங்களில் உலகத்தரம் வாய்ந்த அடிப்படைக் கட்டமைப்பு வசதியை மேம்படுத்துவது, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு முக்கிய அம்சமாகத் திகழ்கிறது. பெரும் சுற்றுலாத் தலங்களையும், பெரும் சுற்றுச் சாலை சுற்றுலாக்களையும் கண்டறிதல், நமது மாநிலத்தில் சுற்றுலாவை மேம்படுத்துவதற்கான காரணியாக தொடர்ந்து மேற்கொள்ளப்படும். அதன்படி முக்கியமான பெரும் சுற்றுலாத் தலங்களையும், சுற்றுச் சாலை சுற்றுலாக்களையும் கண்டறிந்து, திருப்பரங்குன்றம், கொடைக்கானல், பழனி, மேட்டூர் அணை, சிக்கல்–வேளாங்கன்னி–நாகூர் சுற்றுச் சாலை மற்றும் மதுரை–இராமேசுவரம்–கன்னியாகுமரி சுற்றுச் சாலை ஆகிய திட்டங்களுக்காக 2009–2010 ஆம் ஆண்டில் இந்திய அரசிடமிருந்து நிதி ஒப்பளிப்பையும் பெற்றுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலாத்துறை, பின்வரும் மூன்று வழிகளில் கட்டமைப்பு வசதித் திட்டங்களுக்கு உதவி வருகிறது.

அ) இந்திய அரசு சுற்றுலா அமைச்சகத்திடமிருந்து நிதி உதவி

ஆ) மாநில அரசிடமிருந்து நிதி உதவி மற்றும்

இ) மாநில அரசின் பிற துறைகளிடமிருந்து நிதிகளைப் பெறுதல்

## இந்திய அரசு நிதியுதவித் திட்டங்கள்

இந்திய அரசின் சுற்றுலாத் துறை அமைச்சகம் 2009–2010 ஆம் ஆண்டில், தமிழ்நாடு சுற்றுலாத் துறைக்கு பின்வரும் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | இந்திய அரசு சுற்றுலாத்துறை அமைச்சகம் அனுமதித்த தொகை | இந்திய அரசு சுற்றுலாத்துறை அமைச்சகம் விடுவித்த தொகை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | மதுரை மாவட்டம் திருப்பரங்-குன்றத்தை மேம்படுத்துதல் | 387.63 | 310.10 |
| 2 | சுற்றுலாத்தல மேம்பாட்டுத் திட்டம் நிலை–II ன் கீழ் திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலை மேம்படுத்துதல் | 427.00 | 341.62 |
| 3 | சுற்றுலாத்தல மேம்பாட்டுத் திட்டம் நிலை–II ன் கீழ் திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள பழநி மேம்பாடு | 261.00 | 209.45 |
| 4 | சிக்கல் – வேளாங்கன்னி – நாகூர் ஆகிய சுற்றுலா வழிபாட்டுத்தல பயணச் சுற்று மேம்பாடு | 230.00 | 184.04 |
| 5 | சுற்றுலாத்தல மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் உள்ள மேட்டூர் அணையின் LBS பூங்காவில் பொழுதுபோக்கு வசதிகளை ஏற்படுத்துதலும், அழகு படுத்துதலும் | 215.33 | 172.26 |
| 6 | பெரும் சுற்றுலா சுற்றுச் சாலை திட்டத்தின் கீழ் மதுரை–இராமேசுவரம்–கன்னியாகுமரி மேம்பாடு | 3647.95 | – – |
| | **மொத்தம்** | 5168.91 | 1217.47 |



2007–2008 ஆம் ஆண்டில் இந்திய அரசு சுற்றுலாத் துறையால் ஒப்புதல் அளிக்கப்பட்டு நடைபெற்று வரும் திட்டங்கள் பின்வருமாறு –

| வ. எண் | திட்டத்தின் பெயர் | இந்திய அரசு சுற்றுலாத்துறை அமைச்சகம் அனுமதித்த தொகை | இந்திய அரசு சுற்றுலாத்துறை அமைச்சகம் விடுவித்த தொகை |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| (1) | (2) | (3) | (4) |
| 1 | சுற்றுலாத்தல மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சிவகங்கை மாவட்டத்திலுள்ள செட்டிநாட்டை மேம்படுத்துதல் | 475.35 | 380.28 |
| 2 | சுற்றுலாத்தல மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வேலூர் கோட்டைப் பகுதியை மேம்படுத்துதல் | 89.32 | 71.46 |
| 3 | சுற்றுச்சூழல் சுற்றுலா பயணச் சுற்று திட்டத்தின் கீழ் உதகமண்டலம்–முதுமலை–ஆனைமலை மேம்பாடு | 439.50 | 351.60 |
| 4 | சுற்றுலாத்தல மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வேலூர் மாவட்டத்திலுள்ள ஏலகிரியை மேம்படுத்துதல் | 365.72 | 292.57 |
| 5 | தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த சுற்றுலா பயணச் சுற்று திட்டத்தின் கீழ் சப்தவிடங்கள் ஸ்தல சுற்றுலா பயணச் சுற்று மேம்பாடு | 314.45 | 251.56 |
| 6 | சுற்றுலாத்தல மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள கும்பகோணத்தை மேம்படுத்துதல் | 187.00 | 149.60 |
| 7 | சுற்றுலாத்தல மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள திருவரங்கம் மேம்பாடு | 372.70 | 298.16 |
| 8 | சுற்றுலாத்தல மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மெரினா கடற்கரை மேம்பாடு | 492.76 | 394.21 |
| 9 | சேவை புரிவோருக்கான பயிற்சித் திட்டம் | 12.116 | 6.00 |
| | | 2748.916 | 2195.44 |

2008–2009 ஆம் ஆண்டில் இந்திய அரசு சுற்றுலா அமைச்சகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வரும் திட்டங்கள் பின்வருமாறு –

| வ. எண் | திட்டத்தின் பெயர் | இந்திய அரசு சுற்றுலாத்துறை அமைச்சகம் அனுமதித்த தொகை | இந்திய அரசு சுற்றுலாத்துறை அமைச்சகம் விடுவித்தத தொகை |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| (1) | (2) | (3) | (4) |
| 1 | நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள தரங்கம்பாடியை மேம்படுத்துதல் | 373.08 | 298.47 |
| 2 | சுற்றுலாத்தல மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள பழவேற்காட்டை மேம்படுத்துதல் | 260.00 | 208.00 |
| 3 | ஒருங்கிணைந்த சுற்றுலா பயணச்சுற்று மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஸ்ரீபுரம் – அமிர்தி காடு – பாலாமதி மலை பகுதி சுற்றுலா பயணச் சுற்று மேம்பாடு | 415.78 | 332.62 |
| 4 | மாமல்லபுரத்தில் போக்குவரத்து மாற்ற முனையத்துடன் கூடிய சுற்றுலா வசதி மையம் கட்டுதல் | 366.03 | 218.42 |
| 5 | நாமக்கல் மாவட்டத்தில் உள்ள கொல்லிமலையை சுற்றுலாத் தலமாக மேம்படுத்துதல் | 327.98 | 262.38 |
| 6 | சுதந்திரப் போராட்ட தியாகிகளின் சுற்றுலா பயணச் சுற்று மேம்பாடு | 290.19 | 232.15 |
| 7 | சுற்றுலாத் தல மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள குற்றாலத்தை மேம்படுத்துதல் | 452.25 | 361.80 |
| 8 | சுற்றுலாத் தல மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள திருச்செந்தூரை மேம்படுத்துதல் | 402.95 | 322.36 |
| 9 | சுற்றுலாத் தல மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தருமபுரி மாவட்டத்திலுள்ள ஒகேனக்கல்லை மேம்படுத்துதல் | 336.18 | 268.94 |
| 10 | சென்னையில் திறந்தவெளி கலையரங்கம் அமைத்தல் | 368.08 | 294.46 |
| | கூடுதல் | **3592.52** | **2799.60** |



### மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் (HADP), நீலகிரி மாவட்டம்

நீலகிரியில் சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக, 2009–2010ஆம் ஆண்டில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.179.00 இலட்சத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டது. இப்பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

2010–2011ஆம் ஆண்டிலும், சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.100.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் (WGDP)

மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய இடங்களில் சுற்றுலா வசதிகள் செய்வதற்காக 2009–2010ஆம் ஆண்டில் ரூ.50.90 இலட்சத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டது.

**பிற துறைகளிடமிருந்து நிதிகளைப் பெறுதல்**

சுற்றுலாத் தலங்களை முழுமையான மேம்படுத்தப்பட்ட ஒன்றாக உருவாக்குவதற்கு, மாநில அரசின் பிற துறைகளிடமிருந்து நிதிகளைப் பெற்று, பரந்த தொலைநோக்குடன் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு தமிழக அரசின் சுற்றுலாத்துறை திட்டமிட்டுள்ளது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிர்வாகத் துறையும் சுற்றுலாத்துறைக்கு உதவிடும் வகையில், சுற்றுலா வளமிக்க கிராமப் பகுதிகளைக் கண்டறிந்து தேர்வு செய்து, அவற்றுக்கான கட்டமைப்பு வசதிகள், நீர் ஆதாரங்கள் அமைத்தல் மற்றும் சார்ந்த வசதிகளுக்கான நிதியினை வழங்கி கிராமச் சுற்றுலாவை மேம்படுத்திட உதவுகிறது. நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறையும் இதனை முன்னுரிமைப்படுத்தி சுற்றுலா மையங்களுக்குச் செல்லும் சாலைகள் மேம்பாட்டிற்காக 25 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. சுற்றுலாத்துறை வரவு செலவு திட்ட ஆய்வு வரம்பின் கீழ், சுற்றுலாத் தலங்களை இணைக்கும் நெடுஞ்சாலைகள் மேம்பாட்டிற்காக அரசு 10 கோடி ரூபாய் அளித்துள்ளது.

**கடந்த இரண்டு ஆண்டுகளில் சாலைகள் மேம்பாடு**

2008–09 ஆம் ஆண்டில் சுற்றுலாத்துறை நிதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள சாலை மேம்பாட்டு பணிகளின் விவரம்:

| வ. எண். | மாவட்டம் | பணிகளின் விவரம் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | சென்னை–பொன்னேரிக்கரை–காஞ்சிபுரம் சாலை மேம்பாடு | 981.15 |
| 2 | கன்னியாகுமரி | கன்னியாகுமரி மாவட்ட சுற்றுலாத் தலங்கள் இணைப்பு சாலை மேம்பாடு | 18.85 |
| | | மொத்தம் | 1000.00 |



2009–10 ஆம் ஆண்டில் சுற்றுலாத்துறை நிதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள சாலை மேம்பாட்டு பணிகளின் விவரம்:

| வ. எண். | மாவட்டம் | பணிகளின் விவரம் | தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | வேலூர் | வேலூர் – சுற்றுலாத் தலங்கள் இணைப்பு சாலை-தெள்ளூர் சாலை அகலப்படுத்தும் பணி | 450.00 |
| 2 | திருவண்ணாமலை | திருவண்ணாமலை கிரிவலப் பாதை மேம்பாடு | 400.00 |
| 3 | இராமநாதபுரம் | இராமநாதபுரம் – ஏர்வாடி தர்காவிலிருந்து சின்ன ஏர்வாடி வரை சாலை அகலப் படுத்துதல். | 75.00 |
| 4 | தேனி | தேனி – உத்தமபாளையம்-சுருளிப்பட்டி சாலை மேம்பாடு | 70.00 |
| 5 | காஞ்சிபுரம் | சென்னை–பொன்னேரிக்கரை -காஞ்சிபுரம் சாலை மேம்பாடு | 18.85 |
| | | மொத்தம் | 1013.85 |

2009–2010 ஆம் ஆண்டில் நெடுஞ்சாலைத் துறை நிதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள சாலை மேம்பாட்டு பணிகளின் விவரம்:

| வ. எண். | கோட்டம் | பணிகளின் விவரம் | தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | திருவாரூர் | மயிலாடுதுறை – திருத்துறைப் பூண்டி தேர் வீதிகள் சிமெண்ட் கான்கிரீட் நடைபாதை, மயிலாடுதுறை – திருத்துறைப் பூண்டி சாலை முதல் திருவாரூர் – குடவாசல் – வலங்கைமான் சாலை, தியாகராசா கோயில் தெற்கு மற்றும் மேற்கு வீதிகள் (நகராட்சி சாலைகள்) | 600.00 |
| 2 | செங்கல்பட்டு | வேடந்தாங்கல் சாலை திடப்படுத்தி அகலப்படுத்துதல் | 600.00 |

| 3 | திருநெல்வேலி | வீரவநல்லூர் – திருப்புடைமருதூர் சாலை மேம்படுத்தி அகலப்படுத்துதல் | 290.00 |
|---|---|---|---|
| 4 | திருச்சிராப்பள்ளி | இரகுடி–ஆலத்துடையான்பட்டி– புளியஞ்சோலை சாலை மேம்படுத்தி அகலப்படுத்துதல் | 200.00 |
| 5 | சிவகங்கை | காரைக்குடி – சூரக்குடி சாலை மேம்படுத்துதல் | 55.00 |
| 6 | சிவகங்கை | கோவிலூர் – குன்றக்குடி சாலை திடப்படுத்தி அகலப்படுத்துதல் | 230.00 |
| 7 | சிவகங்கை | திருக்கோஸ்டியூர் – கண்டரமாணிக்கம் சாலை மேம்படுத்துதல் | 20.00 |
| 8 | சிவகங்கை | பிள்ளையார்பட்டி – சிறுவயல் சாலை மேம்படுத்துதல் | 25.00 |
| 9 | சிவகங்கை | எஸ்.வி மங்கலம் – மேலப்பட்டி சாலை மேம்படுத்துதல் | 50.00 |
| 10 | தஞ்சாவூர் | கல்லணை – காவேரிப்பட்டினம் சாலை மேம்படுத்தி அகலப் படுத்துதல் (சுவாமிமலைகோயில்) | 100.00 |
| 11 | நாகர்கோவில் | ஆரல்வாய்மொழி – நெடுமங்காடு சாலை மேம்படுத்துதல் | 180.00 |
| 12 | நாகர்கோவில் | மார்த்தாண்டம் – பேச்சிப்பாறை சாலை மேம்படுத்துதல் | 120.00 |
| | | மொத்தம் | 2470.00 |



### மாநில அரசால் நிதியுதவி அளிக்கப்பட்ட திட்டங்கள்

தமிழ்நாட்டில் சுற்றுலா மேம்பாட்டிற்காக, 2009–2010 ஆம் ஆண்டில் மாநில அரசு பின்வரும் திட்டங்களுக்கு அனுமதி அளித்துள்ளது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | சுற்றுலாத் துறையின் பங்கு | மாவட்ட நிர்வாகப் பங்கு | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | காஞ்சிபுரம் மாவட்டம் கோட்டைக்காவல் கிராமத்தில் கலை மற்றும் பண்பாட்டு வளாகம் அமைத்தல் | 30.00 | –– | 30.00 |
| 2 | சிவகங்கை மாவட்டம், திருப்புவனம், மடப்புரம் அருள்மிகு பத்ரகாளியம்மன் கோவில் பகுதியில் அடிப்படை வசதிகள் செய்தல் | 126.00 | –– | 126.00 |
| 3 | கோயம்புத்தூர் மாவட்டம் வால்பாறையில் யாத்ரி நிவாஸ் (Yatri Niwas) கட்டுதல் | 41.14 | 30.00 | 71.14 |
| 4 | கரூர் மாவட்டம், குளித்தலையில் உள்ள அய்யர்மலை அருள்மிகு ரத்தினகிரீஸ்வரர் ஆலயப் பகுதியில் அடிப்படை வசதிகள் | 50.00 | –– | 50.00 |
| 5 | கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரியில் காட்சிக் கோபுரத்தின் மேற்குப் பகுதியில் கடற்கரை அருகில் நடைபாதை அமைத்தல் | 75.00 | ––– | 75.00 |
| 6 | தேனி மாவட்டம் வைகை அணையில் உள்ள நீரூற்றை புதுப்பித்தல் மற்றும் இசைக்கேற்ப நடனமிடும் நீரூற்று அமைத்தல் | 34.20 | ––– | 34.20 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | ஈரோடு மாவட்டம், கோபி வட்டம், கொடிவேரி அணையில் மூன்றடுக்கு காட்சிக் கோபுரம் | 12.26 | 4.09 | 16,35,000 |
| 8 | திருநெல்வேலி மாவட்டம் உவரி கிராமத்தை மேம்படுத்துதல் | 100.00 | --- | 100.00 |
| 9 | சென்னை வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவின் முகப்புப் பகுதியின் வடிவமைப்பை மேம்படுத்துதல் | 200.00 | --- | 200.00 |
| 10 | நாகப்பட்டினம் மாவட்டம் தரங்கம்பாடியில் மேல்நிலை கம்பித் தொடரை நிலத்தடி கம்பிவட முறையாக மாற்றுதல் | 211.50 | --- | 211.50 |
| 11 | காஞ்சிபுரம் மாவட்டம், பம்மல் நகராட்சி, அருள்மிகு அமிர்தாம்பிகை அர்கீஸ்வரர் சூரியம்மன் கோவில் பகுதியில் அடிப்படை வசதிகள் செய்தல் | 31.50 | 31.50 | 63.00 |
| 12 | மதுரை திருமலை நாயக்கர் மகாலில் ஒலி–ஒளிக் காட்சியை நவீனப்படுத்துதல் – மைய அரசு நிதி உதவித் திட்டத்தின் இறுதித் தவணையை விடுவித்தல் | 43.47 | ---- | 43.47 |
| | **மொத்தம்** | **955.07** | **65.59** | **1,020.66** |

2009–2010 ஆம் ஆண்டில் பகுதி–II திட்டத்தின் கீழ் பின்வரும் திட்டங்களுக்கு மாநில அரசின் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண். | திட்டத்தின் பெயர் | ஒப்புதல் அளிக்கப் பட்ட தொகை |
|---|---|---|
| 1 | நாகப்பட்டினம் மாவட்டம் திருக்கடையூரில் (அபிராமி கோயில்) ஒருங்கிணைந்த சுற்றுலா வசதிகள் | 75.00 |
| 2 | கோயம்புத்தூர் மாவட்டம் வால்பாறையில் ஒருங்கிணைந்த சுற்றுலா வசதிகள் | 100.00 |
| 3 | ஈரோடு மாவட்டம் அந்தியூரில் சுற்றுலா வசதிகளை மேம்படுத்துதல் | 15.00 |
| | மொத்தம் | 190.00 |



2007–08 ஆம் ஆண்டில் மாநில அரசால் அனுமதி வழங்கப்பட்டு நடைபெற்றுவரும் சுற்றுலா திட்டங்கள் பின்வருமாறு

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை |
|---|---|---|
| 1 | தூத்துக்குடி மாவட்டம் பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை மேம்படுத்தி புதுப்பிக்கும் பணிகள் | 28.50 |
| 2 | திருநெல்வேலி மாவட்டம் குற்றாலம் மேம்பாடு | 44.00 |
| 3 | கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வனபத்ர காளியம்மன் கோவில் பகுதியில் உள்கட்டமைப்பு வசதிகள் செய்தல் | 34.49 |
| 4 | தூத்துக்குடி மாவட்டம், குலசேகரப்பட்டினத்தில் கடற்கரை பூங்கா அமைத்தல் | 22.00 |
| 5 | சிவகங்கை மாவட்டம், பிள்ளையார்பட்டியில் உள் கட்டமைப்பு வசதிகள் செய்தல் | 25.00 |
| 6 | தேனி மாவட்டம், குச்சனூர் அருள்மிகு சனீஸ்வர பகவான் ஆலயப் பகுதியில் அடிப்படை வசதிகள் | 23.25 |
| 7 | தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரம் மேம்பாடு | 31.25 |
| 8 | திருவாரூர் மாவட்டம், கண்கொடுத்த வனிதத்தில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் செய்தல் | 62.30 |
| 9 | நாகப்பட்டினம் மாவட்டம் சிக்கல் மேம்பாடு (அருள்மிகு நவநீதீஸ்வரசுவாமி கோவில் வளாகத்தை மேம்படுத்தி அழகுபடுத்துதல்) | 14.97 |
| 10 | மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் கோவிலின் 5 நுழைவு வாயில்களில் காலணி பாதுகாக்குமிடம், பொருள் வைப்பறை கட்டுதல் மற்றும் எல்லீஸ் நகரில் புனிதப் பயணிகளுக்கு ஓய்வுக் கூடம் கட்டுதல் | 42.45 |
| 11 | திருநெல்வேலி மாவட்டத்தில் சுற்றுலாத் தலங்கள் மேம்பாடு (2007–2008 ஆம் ஆண்டில் ரூ.81.45 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதில், ரூ.34.93 இலட்சம் அளவுக்கு மட்டுமே அனுமதியளிக்கப்பட்டது) | 34.93 |
| | மொத்தம் | 363.14 |

2008–09 ஆம் ஆண்டில் மாநில அரசால் அனுமதி வழங்கப்பட்டு நடைபெற்று வரும் சுற்றுலா திட்டங்கள் பின்வருமாறு

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண். | திட்டத்தின் பெயர் | ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை |
|---|---|---|
| 1 | திருவள்ளூர் மாவட்டத்தில் பூண்டி அணைப் பகுதியை மேம்படுத்துதல் (பகுதி–II திட்டம்) | 50.00 |
| 2 | நாமக்கல் மாவட்டம் கொல்லிமலைப் பகுதியை மேம்படுத்துதல் (பகுதி–II திட்டம்) | 100.00 |
| 3 | ஒட்டேரி ஏரி, வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா மேம்பாடு – படகுத்துறை கட்டுதல் மற்றும் படகுகள் வாங்குதல் | 20.00 |
| 4 | திருநெல்வேலி மாவட்டத்தில் சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துதல் | 30.23 |
| 5 | பெரம்பலுார் மாவட்டம், சாத்தனூரில் புதைபடிவ மரம் (Fossil Tree) அமைந்துள்ள பகுதியில் சுற்றுலா உள்கட்டமைப்பு வசதிகள் செய்தல் | 50.10 |
| 6 | சென்னையில் கோயம்பேடு அருள்மிகு குறுங்காலீஸ்வரர் கோயில் மற்றும் வைகுண்டவாசப் பெருமாள் கோயில்களுக்கு இடையிலுள்ள சாலையை மேம்படுத்துதல் | 3.40 |
| 7 | வேலூர் மாவட்டம் சோளிங்கரில் அருள்மிகு லட்சுமி நரசிம்ம சுவாமி கோவில் பகுதியில் சுற்றுலா உள்கட்டமைப்பு வசதிகள் செய்தல் | 16.18 |
| 8 | கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை பேட்டராய சுவாமி கோவில் வளாகத்தில் உள்கட்டமைப்பு வசதிகள் செய்தல் | 9.75 |
| 9 | திருநெல்வேலி மாவட்டம், தென்காசியில் உயர் கோபுர மின் விளக்கு மற்றும் சாலை வசதிகள் அமைத்தல் | 18.60 |
| 10 | நாகப்பட்டினம் கடற்கரையை அழகுபடுத்துதல் | 121.50 |
| 11 | திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலில் உள்கட்டமைப்பு வசதிகள் செய்தல் | 69.13 |
| 12 | வேலூர் மாவட்டம், ஏலகிரி மலையில் உள்கட்டமைப்பு வசதிகள் செய்தல் | 70.425 |
| 13 | விழுப்புரம் மாவட்டம், வீடூர் அணையை மேம்படுத்துதல் | 30.00 |
| 14 | சேலம் மாவட்டம், தாரமங்கலத்தில் உள்கட்டமைப்பு வசதிகள் செய்தல் | 60.00 |
| 15 | விழுப்புரம் மாவட்டம் கல்வராயன் மலைப்பகுதி மேம்பாடு | 60.00 |
| 16 | கன்னியாகுமரி மாவட்டம், திற்பரப்பு நீர்வீழ்ச்சி பகுதியில் உள்கட்டமைப்பு வசதிகள் செய்தல் | 85.00 |
| 17 | மதுரையில் 3 முக்கிய கோயில்களைச் சுற்றி உள்கட்டமைப்பு வசதிகள் செய்தல் | 101.75 |
| 18 | இராமநாதபுரம் மாவட்டம், இராமேசுவரத்தில் அக்னி தீர்த்தம் அருகே வாகன நிறுத்துமிடம் அமைத்தல் | 24.00 |
| 19 | காஞ்சிபுரம் மாவட்டம், வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவின் முகப்புத் தோற்றத்தை மேம்படுத்துதல் | 125.00 |
| 20 | கடலூர் மாவட்டம், வடலூர் சத்திய ஞான சபையில் உள்கட்டமைப்பு வசதிகள் செய்தல் | 68.41 |
| | மொத்தம் | 1,113.475 |



## நிதி ஒதுக்கீடு

சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை நிறைவு செய்திட, இந்திய அரசு மற்றும் மாநில அரசின் நிதி உதவியின் மூலம் அனைத்து சுற்றுலாத் தலங்களிலும் ஓய்வுக் கூடம், கழிவறை வசதிகள், வாகன நிறுத்துமிடம், குடிநீர் வசதி, சாலைகள் போன்ற இன்றியமையாத அடிப்படை தேவைகள் அமைக்கப்பட்டுள்ளன. கடந்த நான்கு ஆண்டுகளில் உள் கட்டமைப்பு வசதிகளுக்காக வழங்கப்பட்ட நிதிகள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:–

| ஆண்டு | தொகை |
|---|---|
| 2006–07 | ரூ.63.57 கோடி |
| 2007–08 | ரூ.51.53 கோடி |
| 2008–09 | ரூ.62.04 கோடி |
| 2009–10 | ரூ.62.90 கோடி |

## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சியை முறைப்படுத்தவும், நிதி குறைவு காரணமாக தனியார் எவரும் சுற்றுலா நடத்த முன்வராத குறிப்பிட்ட சில பகுதிகளிலும் சுற்றுலா நடத்திட வேண்டுமென்ற சிறந்த நோக்கத்தாலும், இதற்கு முன்னோடியாக கழகம் ஒன்றினை அமைத்திட வேண்டுமென்று தமிழ்நாடு அரசு கருதியதால், 1971–ஆம் ஆண்டில் 'தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்' தொடங்கி வைக்கப்பட்டது.

அதிகப் பிரபலமாகாத சுற்றுலாத் தலங்களில் தங்கும் விடுதி மற்றும் உணவக வசதிகளை உருவாக்குதல், அநேக சுற்றுலா மையங்களில் படகு இல்லங்கள் அமைத்தல், தமிழகத்திலுள்ள அறியப்படாத சுற்றுலாப் பகுதிகளை உள்ளடக்கிய புதிய தொகுப்பு சுற்றுலாக்களை வடிவமைத்தல் போன்ற வசதிகளை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கி வருகிறது. தமிழ்நாடு சுற்றுலாக்கள் மற்றும் படகு இல்லங்கள் குறித்த விபரம் தனியாக இணைப்பில் அளிக்கப்பட்டுள்ளது.

தற்போது 55 சங்கிலித் தொடர் ஓட்டல்கள் மற்றும் 24 சொகுசுப் பேருந்துகளோடு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இயங்கி வருகிறது. உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு போன்ற முக்கிய சுற்றுலா மையங்களில் இளைஞர் விடுதிகளையும் நடத்தி வருகிறது. இவற்றில் சாதாரண வசதிகளை நாடும் சுற்றுலாப் பயணிகள், கல்வி நிறுவனங்களின் மாணவர்கள் ஆகியோர் உச்சகட்ட கோடை விடுமுறை காலங்களிலும் குறைந்த செலவில் தங்கிச் செல்ல "தனி நபர்கள் பலர் ஒன்றாக ஓரறையில் தங்கும் வசதி" கொண்ட (டார்மிட்டரி) அறைகள் உள்ளன.



## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்களையும், உணவகங்களையும் தனியாருக்கு குத்தகைக்கு விடுதல்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் 31 ஓட்டல்களுக்கும், 10 உணவகங்களுக்கும் தனியுரிமை வழங்க அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதுநாள்வரை 24 ஓட்டல்களுக்கும், ஏழு உணவகங்களுக்கும் தனியுரிமை அளிக்கப்பட்டுள்ளது. தனியுரிமை அளித்ததன் மூலம் ஈட்டப்பட்ட வருவாய், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்படுகிற மற்ற ஓட்டல்கள் மற்றும் உணவகங்களை மேம்படுத்திட பயன்படுத்தப் படுகிறது.

## மின்னணு ஆளுமை முனைப்பு நடவடிக்கைகள்

மாநில சுற்றுலா வளர்ச்சிக் கழகங்களில் முதன்முதலில் இணைய தளம் மூலம் நேரடி முன் பதிவு செய்யும் முறை அறிமுகப்படுத்திய பெருமை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு உரியதாகும். இணைய தள முன்பதிவு மூலம் 2004–2005ஆம் ஆண்டில் ரூ.14.97 இலட்சமாக இருந்த வருவாய், 2009–2010ஆம் ஆண்டில் ரூ.185.14 இலட்சமாக உயர்ந்துள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனது வலைத்தளத்தினை சீரமைத்து, பொருட்காட்சிகள், விழாக்கள், கலை மற்றும் பண்பாடு, மருத்துவ சுற்றுலா, செய்திகள், நிகழ்வுகள், முக்கிய சுற்றுலாத் தலங்கள் குறித்த புகைப்படம் மற்றும் வீடியோக்களின் தொகுப்பு, பிற சுற்றுலா வலைத் தளங்களுடன் பயனுள்ள இணைப்புகள், இரயில் மற்றும் விமானப் பயணம் முதலிய விபரங்களை சேர்த்து வடிவமைத்துள்ளது. இந்த வலைத் தளத்தை 2008–2009ம் ஆண்டில் 6.74 இலட்சம் நபர்கள் பார்வையிட்டுள்ளனர். இது 2009–2010ம் ஆண்டில் 8.49 இலட்சமாக அதிகரித்துள்ளது.

மாமல்லபுரம், உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு, திருச்சி, மதுரை–I, மதுரை–II, தஞ்சாவூர், கோயம்புத்தூர், திருச்செந்தூர், இராமேசுவரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களிலுள்ள 12 முக்கியமான ஓட்டல்களின் (ஓட்டல் தமிழ்நாடு) ஓட்டல் நிர்வாக செயல்பாட்டு முறையை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், கணினி மயமாக ஆக்கியுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், ஒட்டுமொத்த சுற்றுலா நடத்துதலுக்கு கணினிமயமான தொகுப்பு சுற்றுலாக்கள் மேலாண்மை முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. மேலும், தமிழ்நாடு, புது டில்லி, மும்பை மற்றும் கொல்கத்தா ஆகிய இடங்களில் அமைந்துள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விற்பனை நிலையங்களின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்த முன்பதிவு ஏற்பாட்டு முறையாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அறிமுகப்படுத்தியுள்ளது.

மின்னணு ஆளுமை முறை 24 மணி நேரமும் கண்காணிக்கப்படுவதால், மேற்சொன்ன மின்னணு ஆளுமை முறை பயனுள்ள வகையில் செயல்படுவதுடன், வலைத் தளமும் அடிக்கடி நாளது தேதி வரை மேம்படுத்தப் படுகிறது.

**வர்த்தக முனைப்பு நடவடிக்கைகள்**

- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் நடத்தப்படும் சுற்றுலாக்களையும், ஓட்டல்களையும் விளம்பரப் படுத்துவதற்காக டில்லி, மும்பை, கொல்கத்தா மற்றும் பெங்களூரு ஆகிய இடங்களில் சாலையோர காட்சி விளக்கங்கள் நடத்தப்பட்டன.

- இந்திய எண்ணெய்க் கழகத்தைச் சேர்ந்த வாடிக்கையாளர்களுக்கு சலுகைக் கட்டணத்தில் கழக ஓட்டல்களில் தங்குமிட வசதி அளிப்பதற்காக, இந்திய எண்ணெய் கழகத்துடன் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டுள்ளன.



- ரூ.5.62 இலட்சம் வருமானம் ஈட்டும் வகையில், இராணுவப் பணியாளர்களுக்காக சிறப்பு தொகுப்பு சுற்றுலாக்கள் நடத்தப்பட்டன.

- மாமல்லபுரம் கடற்கரை தங்குமிட வளாகத்தில், நூலகங்கள் இயக்ககம் மூலம் நடத்தப்பட்ட பயிலரங்கத்தின் வாயிலாக ரூ.4.50 இலட்சம் வருவாயினை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஈட்டியுள்ளது.

- கன்னியாகுமரி மற்றும் மாமல்லபுரத்திலுள்ள ஓட்டல்களில், இந்திய அரசின் காற்று சக்தி துறையால் நடத்தப்பட்ட பயிலரங்கங்களின் மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ரூ.3.26 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளது.

- மாமல்லபுரம் கடற்கரை தங்குமிட வளாகத்தில், சமூக நலத் துறையால் மூன்று நாட்களுக்கு நடத்தப்பட்ட பயிலரங்கங்கள் (மனித வள வளர்ச்சிக்கு சமூக நீதி பரிவர்த்தனை மற்றும் மகளிருக்கு எதிரான சமூக கொடுமைகள்) மூலமாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு ரூ.3.00 இலட்சம் வருவாய் கிடைத்தது.

- இந்திய எண்ணெய் கழகத்தைச் சேர்ந்த 830 வாடிக்கையாளர்களுக்கு, விரும்பிய இடத்தில் ஏறி விரும்பிய இடத்தில் இறங்கும் சுற்றுலாக்களை நடத்துவதற்காக, இந்திய எண்ணெய் கழகத்துடன் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன. இதன் மூலம் ரூ.1.95 இலட்சம் வருமானம் கிடைத்தது.

**புதிய முனைப்பு நடவடிக்கைகள்**

**1) நேர் நிகர் சுற்றுலாக்கள் தொடக்கம்**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனது இணைய தளத்தில் 30–9–2009 அன்று, தமிழகத்தின் முக்கிய சுற்றுலாத் தலங்களை உள்ளடக்கிய ‘நேர் நிகர் சுற்றுலாவை’

துவங்கியுள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் இணைய தளத்தில் சேர்க்கப்பட்டுள்ள இந்த 'நேர் நிகர் சுற்றுலா' குறித்த இணைப்பை சொடுக்குவதன் மூலம், அதிலுள்ள சுற்றுலாத் தலங்களுக்கு ஒருவர் நேரில் சென்று பார்த்து வந்த அனுபவத்தை பெற இயலும். இவ்விடங்களை பார்வையிட்ட பின்னர், தாங்கள் சென்றுவர வேண்டிய சுற்றுலாத் தலத்தை தேர்வு செய்ய இயலும்.

இந்தச் சுற்றுலா, பல்வேறு சுற்றுலா மையங்களை 360 டிகிரி அகல பரப்புக் காட்சியாக காண்பிக்கிறது. இந்த சுற்றுலா வசதி, ஊடகங்களால் சிறப்பான முயற்சி என ஊக்குவிக்கப்பட்டதால், இதுவரை 149 நாடுகளிலிருந்து 3.71 இலட்சம் பார்வையாளர்கள் இந்த இணைய தளத்தை பார்வையிட்டுள்ளனர்.

**நேர் நிகர் அருங்காட்சியகம்**

சென்னை எழும்பூரில் அமைந்திருக்கும் அரசு அருங்காட்சியகம் இந்தியாவில் தலைசிறந்த அருங்காட்சியகங்களில் ஒன்று. அங்கு பல்வேறு விதமான கூடங்கள் பார்வையாளர்களுக்கு காணக்கிடக்கின்றன. அவற்றை பதிவு செய்து இணைய தளத்தில் சுற்றுலாப் பயணிகள் பார்வையிடுவதற்கு வசதியாக நேர் நிகர் அருங்காட்சியகம் என்கிற வசதியை ஏற்படுத்த சுற்றுலாத்துறை முடிவு செய்துள்ளது. இதன் மூலம் அங்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை கணிசமாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**தங்க அட்டை மற்றும் பிளாட்டினம் அட்டைகள் வலைத்தள வசதி மூலம் பெறுதல்**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தங்க அட்டை மற்றும் பிளாட்டினம் அட்டைகளை 2008 ஆம் ஆண்டு முதல் வழங்கி வருகிறது. இந்த அட்டைதாரர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதி வாடகையில் பெரிதளவில் சலுகை பெறுகின்றனர். சுற்றுலாப் பயணிகள் இந்த அட்டைகளை வலைத் தளத்தில் பெறும் வசதியை 17–2–2010 முதல் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

வலைத்தள முகவரி www.tamilnadutourism.org/onlinecard.



**மாமல்லபுரத்தில் சிற்பப் பூங்கா அமைத்தல்**

மாமல்லபுரத்திலுள்ள கடற்கரை விடுதி வளாகத்தில் 25–12–09 அன்று தமிழக அரசின் மாண்புமிகு. துணை முதல்வர் அவர்களால் "செம்மொழிச் சிற்பப் பூங்கா" திறந்து வைக்கப்பட்டது. இந்த சிற்பப் பூங்காவில், சீர்மிகு சிற்பக்கலை சார்ந்த சிற்பங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த சிற்பங்கள் அனைத்தும் மாமல்லபுரத்திலுள்ள அரசு கட்டடக்கலை மற்றும் சிற்பக் கல்லூரியால் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த சிற்பப் பூங்கா குறித்த தகவல்கள் அடங்கிய சிறு மடிப்பேடுகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் தயாரிக்கப்பட்டுள்ளன. அநேக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இந்த சிற்பங்களைப் பார்வையிட்டு, அவற்றின் மூலம் நமது வளமிக்க கலாச்சாரம் குறித்த உருவகத்தை பெறுகின்றனர்.

**நடமாடும் சுற்றுலா**

தமிழ்நாட்டில் பொதுமக்களிடையே சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் 'சொகுசு கோச்' ஒன்று சீரமைக்கப்பட்டு நடமாடும் பிரச்சார வண்டியாக மாற்றப்பட்டது. இந்த வாகனம், மாநிலத்திலுள்ள முக்கியமான சுற்றுலா தலங்களை காட்சிப் படுத்துகிறது. மேலும் சுற்றுலாப் பயணிகள் பயன் பெற, சுற்றுலா குறித்த வீடியோ திரைப்படங்கள் இந்த வாகனத்தில் திரையிடப்படுகின்றன. இந்த பிரச்சார வாகனத்தில், சுற்றுலா குறித்த கவர்ந்திழுக்கும் பிரசுரங்கள் சுற்றுலா பயணிகளுக்கு விநியோகிக்கப் படுகின்றன.

**சைக்கிளில் மலையேற்றம்**

திருவாளர்கள். டி. ஐ. சைக்கிள்ஸ் நிறுவனத்துடன் இணைந்து, உதகமண்டலம் படகு இல்லத்தில் 'சைக்கிளில் மலையேற்றம்' திட்டத்தினை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 9.4.2010 அன்று தொடங்கி உள்ளது. இது இளைஞர்களை கவரும் ஒரு கூடுதல் அனுகூலமாகும்.

**வாழைப் பழத் திருவிழா**

சென்னை தீவுத் திடலில் 25–7–2009 முதல் 27–7–2009 முடிய மூன்று நாட்களுக்கு வாழைப்பழ விழா நடத்தப்பட்டது. இவ்விழாவில் நூற்றுக்கும் மேற்பட்ட வாழைப்பழ வகைகளும், வாழைப்பழம் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட உணவு வகைகளும் இடம் பெற்று, மிகப் பெரிய வெற்றியாக நிரூபிக்கப்பட்டது.

**சுற்றுச் சூழல் சுற்றுலா**

தமிழ்நாட்டில், சுற்றுச்சூழல் சுற்றுலாவை பெரிய அளவில் மேம்படுத்தும் நோக்கத்துடன், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தில் 19–10–2009 அன்று 'சுற்றுச் சூழல் சுற்றுலா' பிரிவு துவக்கப்பட்டுள்ளது. இந்த சுற்றுச் சூழல் சுற்றுலா பிரிவிற்கு முதன்மை வனப் பாதுகாவலர் பதவி தரத்திலுள்ள அதிகாரி ஒருவர் தலைமையேற்று பணியாற்றி வருகிறார். சுற்றுச் சூழல் சுற்றுலா பிரிவு வாயிலாக, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தால் பின்வரும் மலையேற்றம் குறித்த சுற்றுலாக்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

| | | |
|---|---|---|
| ♦ சேர்வராயன் மலை (ஏற்காடு) | –– | 3 முறைகள் |
| ♦ டாப் ஸ்லிப் – ஆழியாறு | –– | 9 முறைகள் |
| ♦ திரிசூலம் மலை | –– | 3 முறைகள் |
| ♦ கொல்லி மலை | –– | 4 முறைகள் |

இளைஞர்கள் மனத்தில் சாதனைகள் குறித்த தூண்டுதலை விதைத்திட தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இத்தகைய சுற்றுலாக்களை நடத்தி வருகிறது. இவற்றை நடத்தும்போது, இலாபம் ஈட்டுதலுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதில்லை. இச்சுற்றுலாக்கள் மூலம் இதில் பங்கேற்பவர்கள் இயற்கையை ஊக்குவிக்கவும், இயற்கையை பாதுகாக்க வேண்டிய அவசியத்தையும் உணருகின்றனர். இந்த காட்டுவழி நடை பயணம் முடிந்த பின்னர், அது குறித்து தங்களது சிறப்பான கருத்துக்களை தெரிவித்துள்ளனர்.



தமிழ்நாட்டிலுள்ள வனவிலங்கு சரணாலயங்களில் மரத்தின் உச்சியில் வீடுகள் அமைப்பதற்கு, சுற்றுச்சூழல் சுற்றுலா பிரிவு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. மாநிலத்தில் சுற்றுச்சூழல் சுற்றுலா மேம்பாட்டினை ஊக்குவிப்பதற்கு ஏராளமான திட்டங்களை வகுப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பிரிவு விரிவான வரைவு சுற்றுச் சூழல் சுற்றுலா கொள்கை ஒன்றினை, சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறையின் ஆலோசனையுடன் தயாரித்து வருகிறது. இது விரைவில் வெளியிடப்படும்.

பசுமைச் சூழலை உருவாக்குதல் மற்றும் மக்காத பொருட்கள் உபயோகத்தை தவிர்த்தல் ஆகியன மூலம் தமிழ்நாடு சுற்றுலாத்துறையால் நடத்தப்படும் அனைத்து விடுதிகளையும் சுற்றுச் சூழலுக்கு உகந்தவைகளாக அமைக்க உரிய முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. விடுதி வளாகங்களில் மரங்கள் வளர்த்தலை தீவிரப்படுத்துதல், சமையலறைப் பகுதியில் தோட்டங்கள் போன்றவை, போதுமான இடவசதி உள்ள விடுதிகளில் உருவாக்கப்பட்டு, இங்கு விளையும் விளைபொருட்கள் சமையலுக்கு பயன்படுத்தப்படும். வருங்காலங்களில், மாநிலம் முழுவதுமுள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதிகளில் வளர்ந்த நிலையிலுள்ள மரங்களை நடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**மதுரையிலுள்ள திருமலை நாயக்கர் மகாலில் புதுப்பிக்கப்பட்ட ஒலி–ஒளிக் காட்சியினை தொடங்கி வைத்தல்**

மதுரையிலுள்ள திருமலை நாயக்கர் மகாலில், ரூ.95 இலட்சம் செலவில் ஒலி–ஒளிக் காட்சி புதுப்பிக்கப்பட்டு 12–9–2009 அன்று மாண்புமிகு மத்திய அமைச்சர், உரங்கள் மற்றும் இரசாயனங்கள் துறை அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்த ஒலி–ஒளிக் காட்சி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தால் செயல்படுத்தப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த ஒலி–ஒளிக் காட்சி புதுப்பிக்கப்பட்டு தொடங்கி வைக்கப்பட்ட நாளிலிருந்து 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையில் ரூ.13.14 இலட்சம் வருமானம் ஈட்டியுள்ளது. புதுப்பிக்கப்பட்ட இந்த ஒலி–ஒளிக் காட்சி

மிகுந்த வரவேற்பை பெற்று, சுற்றுலாப் பயணிகள் மதுரையில் இரவில் தங்கி இந்தக் காட்சியை கண்டு மகிழ இயலுகிறது.

**படகு இல்லங்களில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம் பின்பற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள்**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் பல்வேறு படகு இல்லங்களிலுள்ள படகுகள், சென்னையிலுள்ள இந்திய தொழில் நுட்ப நிறுவனத்தின் பெருங்கடல் பொறியியல் துறையில் பேராசிரியராக இருக்கின்ற தொழில்நுட்ப ஆலோசகர் உதவியுடன் வடிவமைக்கப்பட்டு, கட்டப்பட்டு வருகின்றன. சுற்றுலா பயணிகளுக்கு உயர்தர பாதுகாப்பு தரங்களை கருத்தில் கொண்டு இந்த படகுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த படகுகள், தொழில்நுட்ப குறியீடுகளின்படி கட்டப்படுகின்றன என்பதை உறுதி செய்வதற்காக, தொழில்நுட்ப ஆலோசகரால் பல்வேறு நிலைகளில் இந்த படகுகள் ஆய்வு செய்யப்படுகின்றன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் படகுகள் அனைத்தும் நீரில் மூழ்காதவை. பல்வேறு படகு இல்லங்களில், அடிக்கடி மிதப்புத் தன்மை சோதனைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

அதே போன்று, படகு இல்லங்களில் படகு சவாரி செய்கின்ற போது பின்பற்றப்பட வேண்டிய பாதுகாப்பு விதிகள் குறித்து பயணிகளுக்கு கற்றுக் கொடுப்பதற்கு படகு இல்லங்களில் பாதுகாப்பு விழிப்புணர்வு பிரச்சார முகாம்களும் நடத்தப் படுகின்றன.

இந்த படகு இல்லங்கள் அனைத்திலும் போதுமான எண்ணிக்கையில் உயிர் காக்கும் மிதவைகள் மற்றும் கவச உடைகள் ஆகிய பாதுகாப்பு வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. பயணிகளின் 100 விழுக்காடு பாதுகாப்பிற்கு வகை செய்வதற்கு, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் படகு இல்லங்களில் படகு சவாரி செய்கின்ற சுற்றுலா பயணிகள் அனைவரும் உயிர் காக்கும் கவச உடைகள் அணிவது கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளது.



**அய்யன் திருவள்ளுவர் சிலை**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம், 2002ஆம் ஆண்டிலிருந்து கன்னியாகுமரியிலுள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையை பராமரித்து வருகிறது. சிலையை பாதுகாப்பதற்காக மொத்தம் ரூ.160 இலட்சம் செலவில் 2005 மற்றும் 2008ஆம் ஆண்டுகளில் சிலைக்கு பாலி சிலிகான் மேற்பூச்சு பூசப்பட்டது. மேலும் பல மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இரவு நேரங்களில் சிலைக்கு மின்விளக்கு அலங்கார வசதி செய்வதற்காக, சிலையை சுற்றியிருந்த விளக்குகள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. சிலைக்கு தடையற்ற மின்சார வசதி வழங்கிட ரூ.7.60 இலட்சம் செலவில் 62 கே.வி.ஏ. மின்திறன் கொண்ட புதிய மின்உற்பத்தி சாதனம் ஒன்று நிறுவப்படும்.

**2009–2010 ஆம் ஆண்டில் செயல்பாட்டினை மேம்படுத்துவதற்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

- முட்டுக்காட்டிலுள்ள படகு இல்லம் ரூ.88 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டது. புதுப்பிக்கப்பட்ட இந்த படகு இல்லம் 2009 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் திறந்து வைக்கப்பட்டது.
- ரூ.6.57 இலட்சம் செலவில் விரைவுப் படகு ஒன்று வாங்கப்பட்டு பைகாராவில் இயக்கப்பட்டு வருகிறது.
- ஏற்காட்டிலுள்ள படகு இல்லம் ரூ.35 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டது.
- கோயம்புத்தூரில் தமிழ்நாடு ஓட்டலிலுள்ள 29 அறைகள் ரூ.54.00 இலட்சம் செலவில் தரம் மேம்படுத்தப்பட்டன.

- கிருஷ்ணகிரியில் தமிழ்நாடு ஓட்டலிலுள்ள 16 அறைகள் ரூ.34.00 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டன.

- மதுரை–II பிரிவில் தமிழ்நாடு ஓட்டலிலுள்ள 20 அறைகள் ரூ.62.00 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டன.

- கன்னியாகுமரியில், தமிழ்நாடு ஓட்டலிலுள்ள 10 டீலக்ஸ் குடில்களும், 24 அறைகளும் ரூ.53.00 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டன.

- ஓசூரில், தமிழ்நாடு ஓட்டலிலுள்ள 5 இரட்டை குடில்கள் ரூ.29.58 இலட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டன.

- வில்வித்தை, 'நெட்' கிரிக்கெட், பலூன் சுடும் விளையாட்டு, இலக்கினை சுடும் விளையாட்டு போன்ற பல்வேறு விளையாட்டுகள் கொண்ட சாகச விளையாட்டுகள் வளாகம் ஒன்று மாமல்லபுரத்தில் ரூ.5.50 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டது.

- 24 'கோச்'வண்டிகள் மற்றும் பணியாளர் வண்டிகளை பராமரிப்பதற்காக ரூ.90 இலட்சம் செலவில் சென்னை தீவுத்திடலில் பெட்ரோல் பங்குடன் கூடிய மோட்டார் வாகன பழுது பார்க்குமிடம் கட்டப்பட்டுள்ளது.

**தொடங்கப்பட உள்ள புதிய திட்டங்கள்**

- முதலியார்குப்பத்திலுள்ள படகு இல்லத்தில் கரையோரப் படகுகள் மற்றும் காற்றினால் இயக்கப்படும் படகுகள் அறிமுகப்படுத்தப்படும்.

- ரூ.92.00 இலட்சம் செலவில் 93 படகுகள் வாங்குவதற்கு கொள்முதல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.



- ரூ.23.80 இலட்சம் செலவில் 32 இருக்கைகள் கொண்ட சொகுசு மோட்டார் படகுகள் இரண்டு, வாங்கப்பட்டு பைகாரா மற்றும் முதலியார் குப்பத்தில் இயக்கப்படும்.

- மொத்தம் ரூ.99.55 இலட்சம் செலவில் 18 இருக்கைகள் கொண்ட நான்கு சிறிய 'கோச்' வண்டிகள் குளிர்சாதன வசதி செய்யப்பட்ட இரண்டு சிறிய 'கோச்சு' வண்டிகளாகவும், குளிர்சாதன வசதியற்ற இரண்டு சிறிய 'கோச்சு' வண்டிகளாகவும் மாற்றி அமைக்கப்படுவதுடன், குளிர்சாதன வசதி செய்யப்பட்ட சிறிய 'கோச்சு' வண்டி ஒன்றும் இதில் சேர்த்துக் கொள்ளப்படும்.

- திருச்சிராப்பள்ளியிலுள்ள தமிழ்நாடு ஓட்டலில், ரூ.98 இலட்சம் செலவில் ஒன்பது அறைகளுடன் கூடிய கூடுதல் தளம் கட்டப்படும்.

- தஞ்சாவூரிலுள்ள தமிழ்நாடு ஓட்டலில், ரூ.99 இலட்சம் செலவில் 12 அறைகளுடன் கூடிய கூடுதல் தளம் கட்டப்படும்.

- மதுரையிலுள்ள தமிழ்நாடு ஓட்டல் பிரிவு–IIல், ரூ.34.00 இலட்சம் செலவில் நீச்சல்குளம் கட்டப்படும்.

- மதுரையிலுள்ள தமிழ்நாடு ஓட்டல் பிரிவு–Iல், ரூ.23.00 இலட்சம் செலவில் பயணியர் மின்தூக்கி அமைக்கப்படும்.

- இராமேசுவரத்திலுள்ள தமிழ்நாடு ஓட்டலில், ரூ.35.00 இலட்சம் செலவில் பல்வகை பயன்பாட்டுக் கூடம் ஒன்று கட் டப்படும்.

- பயணிகளுக்கு தடையற்ற மின்சக்தி வழங்குவதற்காக, ரூ.26.50 இலட்சம் செலவில் கன்னியாகுமரியிலுள்ள தமிழ்நாடு ஓட்டலில் 250 கே.வி.ஏ. மின்திறன் கொண்ட மின்உற்பத்தி சாதனம் நிறுவப்படும்.

| நிதி செயலாக்கம் | (ரூ.கோடியில்) | |
|---|---|---|
| | 2009–2010 | 2008–09 |
| மொத்த வியாபாரத் தொகை | 74.96 | 70.25 |
| நிகர இலாபம் | 6.24 | 2.25 |

ஆறாவது ஊதியக் குழு பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்டதன் விளைவாக, பணியாளரமைப்பு செலவுத் தொகையில் ஏற்பட்ட கணிசமான உயர்வினை கணக்கிட்ட பின்னரும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நிகர இலாபத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை எட்டியுள்ளது. மேலும், உதகமண்டலத்தில் ஏற்பட்ட நிலச் சரிவினாலும், தெலுங்கானா பிரச்சினை காரணமாக, திருப்பதி தினசரி சுற்றுலா ஒரு மாதத்திற்கு இயக்க இயலாததாலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பெரிய அளவில் வருமான இழப்பை சந்தித்தது.

சென்ற ஆண்டில் பரவிய பன்றிக் காய்ச்சல் போன்ற நோய்களின் தாக்கத்தால், சுற்றுலாப் பயணிகளின் வருகை குறிப்பிடத்தக்க அளவில் குறைந்தது. பாராளுமன்றத் தேர்தல் காரணமாக 2009ம் ஆண்டில் தீவுத் திடலில் கோடை விழாவினை நடத்த இயலவில்லை.

அனைத்து முக்கியமான ஓட்டல்களில் உள்ள அறைகளை மேம்படுத்தல், கோச் வண்டிகள் மற்றும் படகு இல்லங்களை நவீனமயமாக்குதல், புதிய படகுகளை வாங்குதல் மற்றும் கழக நிர்வாகம் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளால் இலாப வளர்ச்சி அதிகரித்தது.



**முடிவுரை**

சுற்றுலா அயற்சியை நீக்கும், தளர்ச்சியைப் போக்கும், மலர்ச்சியை உருவாக்கும். அது மனிதனின் மன நிலையை முற்றிலுமாக ரசவாதம் செய்யும் ஆற்றல் கொண்டது. இன்றுள்ள வாழ்க்கை சூழலில் இறுக்கத்திலிருந்து விடுபடுவதற்கு பயணம் அவசியம். தமிழகச் சுற்றுலா அனைத்து விதமான வருமானம் கொண்டவர்களும் திருப்தி அடையும் வகையில் சுற்றுலாக்களை அறிமுகப்படுத்தி வருகிறது. பல புதிய திட்டங்களையும், இனிய மாற்றங்களையும் உருவாக்கி இந்நிலையை எய்தி இருக்கிறது. சுற்றுலாவிற்கான வாய்ப்புகள் உலக அளவில் விரிந்து கிடக்கின்றன. பக்கவாட்டு சிந்தனையுடன் கூடிய புத்தாக்க திட்டங்கள் அந்த வாய்ப்புகளை வளமாக பயன்படுத்த உதவியாக இருக்கின்றன. தமிழகம் குறைந்த செலவில் புதிய திட்டங்களை வகுத்து ‘ஒரு குடும்பம்; ஆண்டுக்கொரு சுற்றுலா’ என்கிற இலக்கை அடைய இடைவிடாமல் பாடுபடும்.

என். சுரேஷ் ராஜன்,
சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

## இணைப்பு – 1

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக இணைய தளத்தில் உள்ள உண்மை உணர்த்தும் சுற்றுலாத் தலங்களின் பட்டியல்

1) பெரிய கோவில், தஞ்சாவூர்
2) ஐராவதீஸ்வரர் கோவில், தாராசுரம்
3) மாமல்லபுரம்
4) ஏலகிரி மலை
5) ஏற்காடு
6) வண்டலூர் உயிரியல் பூங்கா
7) கொல்லி மலை
8) குற்றாலம்
9) மீனாட்சியம்மன் ஆலயம், மதுரை
10) கன்னியாகுமரி
11) இராமேசுவரம்
12) பிச்சாவரம்
13) ஒகேனக்கல்
14) கோடியக்கரை
15) காரைக்குடி
16) உதகமண்டலம்
17) கொடைக்கானல்
18) தரங்கம்பாடி
19) திருவண்ணாமலை
20) வால்பாறை
21) டாப் ஸ்லிப்
22) செஞ்சி



## இணைப்பு – 2

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக இணைய தளத்தில் புதியதாக சேர்க்கப்பட்டுள்ள உண்மை உணர்த்தும் சுற்றுலாத் தலங்களின் பட்டியல்

1) பழவேற்காடு
2) சென்னை
3) காஞ்சிபுரம்
4) வேலூர்
5) தாரமங்கலம்
6) சிதம்பரம்
7) கூத்தனூர்
8) திருக்கடையூர்
9) திருமணஞ்சேரி
10) நாகூர்
11) வேளாங்கன்னி
12) அறந்தாங்கி
13) சித்தன்னவாசல்
14) மதுரை
15) ஸ்ரீவில்லிபுத்தூர்
16) பாஞ்சாலங்குறிச்சி
17) கிருஷ்ணாபுரம்
18) திருநெல்வேலி
19) திருப்புடைமரு தூர்
20) திருச்செந் தூர்
21) முட்டம்
22) சுசீந்திரம்
23) திற்பரப்பு
24) பழனி
25) தஞ்சாவூர்
26) திருச்சிராப்பள்ளி

## இணைப்பு – 3

### தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தொகுப்பு சுற்றுலாக்கள்

1) அரை நாள் சென்னை நகர சுற்றுலா
2) ஒரு நாள் காஞ்சிபுரம், மாமல்லபுரம் சுற்றுலா
3) விரும்பும் இடத்தில் ஏறி, இறங்கும் சுற்றுலா
4) ஒரு நாள் திருப்பதி சுற்றுலா
5) ஒரு நாள் திருவண்ணாமலை கிரிவலச் சுற்றுலா
6) ஒரு நாள் ஸ்ரீபுரம் தங்க கோவில் சுற்றுலா
7) ஒரு நாள் பாண்டிச்சேரி சுற்றுலா
8) மூன்று நாட்கள் நவக்கிரக சுற்றுலா
9) நான்கு நாட்கள் அறுபடை வீடுகள் சுற்றுலா
10) ஆறு நாட்கள் தென்னிந்திய சுற்றுலா
11) ஏழு நாட்கள் மூகாம்பிகை சுற்றுலா
12) எட்டு நாட்கள் தமிழ்நாடு சுற்றுலா
13) எட்டு நாட்கள் கிழக்கு மேற்கு கடற்கரையோரச் சுற்றுலா
14) எட்டு நாட்கள் கோவா, மந்த்ராலயம் சுற்றுலா
15) பதினான்கு நாட்கள் தென்னிந்தியச் சுற்றுலா
16) ஏழு நாட்கள் ஆந்திர சுற்றுலா
17) பதினான்கு நாட்கள் மும்பை, அஜந்தா, எல்லோரா சுற்றுலா
18) கோடைகால சிறப்பு சுற்றுலாக்கள்
    - உதகமண்டலம் சுற்றுலா
    - கொடைக்கானல் சுற்றுலா
    - ஏற்காடு சுற்றுலா
    - மைசூர், பெங்களூரு சுற்றுலா
    - மூணாறு சுற்றுலா
    - குற்றாலம் சுற்றுலா



### "குழு சுற்றுலாக்கள்"

பின்வரும் சுற்றுலாக்கள் குழு சுற்றுலாக்கள் என பெயரிடப்பட்டுள்ளன. ஒரு குழுவில் குறைந்தபட்சம் 10 பயணிகள் இருந்தால் மட்டுமே இச்சுற்றுலாவை இயக்கிட இயலும்.

1) ஒரு நாள் சக்தி சுற்றுலா
2) ஒரு நாள் திருமால் தரிசன சுற்றுலா
3) ஒரு நாள் நவக்கிரக சுற்றுலா
4) ஒரு நாள் சுருட்டப்பள்ளி சுற்றுலா
5) மூன்று நாட்கள் திருமணத் திருத்தல சுற்றுலா
6) மூன்று நாட்கள் பஞ்சபூத ஸ்தலங்கள் சுற்றுலா
7) மூன்று நாட்கள் நவ திருப்பதிகள் சுற்றுலா
8) மூன்று நாட்கள் நீர் வீழ்ச்சிகள் சுற்றுலா
9) நான்கு நாட்கள் சோழநாட்டுத் திருப்பதிகள் சுற்றுலா
10) நான்கு நாட்கள் பாண்டிய நாட்டுத் திருப்பதிகள் சுற்றுலா
11) ஐந்து நாட்கள் 108 அம்மன் கோவில்கள் சுற்றுலா

### தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக படகு இல்லங்களின் பட்டியல்

1) முட்டுக்காடு
2) முதலியார்குப்பம்
3) ஏற்காடு
4) பிச்சாவரம்
5) கொடைக்கானல்
6) குற்றாலம்
7) உதகமண்டலம்
8) பைகாரா

## இணைப்பு – 4

அதிகப் பிரபலமாகாத சுற்றுலாத் தலங்களாக ஏற்கனவே அறிவிக்கப்பட்ட 18 இடங்களின் பட்டியல்

| வ. எண் | இடத்தின் பெயர் | மாவட்டத்தின் பெயர் |
|---|---|---|
| | | |
| 1 | பழவேற்காடு | திருவள்ளூர் |
| 2 | பெரியபாளையம் | |
| | | |
| 3 | ஏலகிரி | வேலூர் |
| | | |
| 4 | திருக்கடையூர் | நாகப்பட்டினம் |
| 5 | வேதாரண்யம் | |
| 6 | தரங்கம்பாடி | |
| 7 | திருமணஞ்சேரி | |
| | | |
| 8 | சித்தன்னவாசல் | புதுக்கோட்டை |
| | | |
| 9 | புளியஞ்சோலை | திருச்சிராப்பள்ளி |
| | | |
| 10 | தாரமங்கலம் | சேலம் |
| | | |
| 11 | கொல்லி மலை | நாமக்கல் |
| | | |
| 12 | ஒகேனக்கல் | தருமபுரி |
| | | |
| 13 | பவானி கூடுதுறை | ஈரோடு |
| | | |
| 14 | வால்பாறை | கோயம்புத்தூர் |
| | | |
| 15 | மேகமலை | தேனி |
| | | |
| 16 | சிறுமலை | திண்டுக்கல் |
| | | |
| 17 | திருப்புடைமருதூர் | திருநெல்வேலி |
| | | |
| 18 | திற்பரப்பு | கன்னியாகுமரி |
| | | |



## 19–3–2010 அன்று தமிழக சட்டப் பேரவையில் மாண்புமிகு. நிதித் துறை அமைச்சர் அவர்களின் நிதி நிலை அறிக்கை உரையின்போது புதியதாக அறிவிக்கப் பட்ட அதிகப் பிரபலமாகாத 14 சுற்றுலாப் பகுதிகளின் பட்டியல்

| வ. எண் | இடத்தின் பெயர் | மாவட்டத்தின் பெயர் |
|---|---|---|
| | | |
| 1 | கல்வராயன் மலை | விழுப்புரம் |
| | | |
| 2 | தளி | கிருஷ்ணகிரி |
| | | |
| 3 | பரளி | திண்டுக்கல் |
| | | |
| 4 | கொடிவேரி | ஈரோடு |
| | | |
| 5 | பொள்ளாச்சி | கோயம்புத்தூர் |
| | | |
| 6 | குரங்கணி | தேனி |
| | | |
| 7 | வைகை அணை | தேனி |
| | | |
| 8 | ஸ்ரீவில்லிபுத்தூர் | விருதுநகர் |
| | | |
| 9 | கட்டபொம்மன் கோட்டை | தூத்துக்குடி |
| | | |
| 10 | திருச்செங்கோடு | நாமக்கல் |
| | | |
| 11 | சிக்கல் | நாகப்பட்டினம் |
| | | |
| 12 | பிச்சாவரம் | கடலூர் |
| | | |
| 13 | பச்சமலை | திருச்சிராப்பள்ளி |
| | | |
| 14 | கூத்தனூர் | திருவாரூர் |
| | | |